பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி

# VALAMPURI


சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி 23 | வெள்ளிக்கிழமை | (06.06.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 169

# இடைக்கால சபை முரண்பாடு நேரடிப் பேச்சுக்கள் மூலம் தீர்த்து வைக்க முடியும்!

## ராய்ட்டர்,பி.பி.ஸிக்கு பிரதமர் பேட்டி

(நமது நிருபர்)

**இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமைக்கப்படுவது தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கும்,தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கும் இடையே அதிக வேறுபாடுகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.இந்நிலையில் இருதரப்பினரும் தொடர்ந்து பேச்சுக்களை நடத்தி இணக்கப் பாட்டிற்கு வரமுடியும் என்ற நம்பிக்கை எனக் குண்டு.இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ராய்ட்டருக்கும், பி.பி.ஸிக்கும் நேற்று இரவு வழங்கிய பேட்டியில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**



இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள முரண்பாட்டு நிலையிலும்; பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் மாற்று யோசனைகளை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ள நிலையிலும் யப்பான் செல்லும் முன் நேற்றிரவு ராய்டருக்கும் பி.பி.ஸிக்கும் அளித்த பேட்டியிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் பிரதமர் மேலும் தெரிவித்ததாவது;

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் வரும் முக்கிய விடயங்களை அமுல் படுத்துவதற்கும்,தேக்க நிலை அடைந்துள்ள சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கான நிதி உதவிவழங்கும் மாநாடு முக்கியமான காரணியாக அமையும்.

தற்போதைய சூழ்நிலையில் சர்வதேச சமூகத்தின் பாரிய நிதியுதவி இன்றி, வடக்குக் கிழக்குட்பட நாட்டின் ஏனைய பகுதிகளையும் மீளக் கட்டியெழுப்ப முடியாது.இதனால் சர்வதேச சமூகத்தின் பரிபூரணமான ஒத்துழைப்பு எமக்குத் தேவையாக உள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.உயர் மட்டக் குழுவினர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

ஐககிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய உயர் மட்டக் குழுவினர் நேற்றுக் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்னர்.

கொழும்பில் இருந்து விமான மூலம் பலாலியை வந்தடைந்த இக் குழுவினர் யாழ்.அரச அதிபர் எஸ். பத்மநாதனை மாவட்ட செயலகத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் ஏ-9 வீதியூடாக கிளிநொச்சியைச் சென்றடைந்து,புலிகளின் அரசியல்துறை நடுவச் செயலகத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு குறித்தும்,புலிகள்

(10ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பீரிஸ் ஜப்பான் பயணம்

(கொழும்பு)

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் மாநாட்டிற்கு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஜப்பானிற்குப் பயணமாகியுள்ளார்

நேற்று முன்தினம் இரவு ஜப்பான் பயணமாகியுள்ள அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிசுடன் உலக வங்கியின் இலங்கைப் பிரதிநிதி சரித்த ரத்வத்த மத்திய வங்கி ஆளுனர் ஜெயவர்த்தனா ஆகியோரும்

(10ம் பக்கம் பார்க்க)

## புலி உறுப்பினர் இருவர் படையினரால் கைது

(திருகோணமலை)

திருகோணமலை தம்பலகாமத்தில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பிரவேசித்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் இருவரை திருகோணமலை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் திருகோணமலை மாவட்ட நீதிபதி அன்ரன் பாலசிங்கம் முன்னிலையில வசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இருவரையும் விசாரணை செய்த நீதிவான் எதிர்வரும் 18-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (இ-5)

## அரசியல் அமைப்பில் மாற்றம் செய்தால் பாராளுமன்றம் கலைக்கப்படும்!

### பொலிஸ் திணைக்களமும் விரைவில் ஜனாதிபதியிடம் -அநுரா பண்டாரநாயக்கா தெரிவிப்பு

(அனுராதபுரம்)

தற்போதைய அரசியற் சூழ்நிலையில் அரசியல் அமைப்புக்களில் சிறிய மாற்றம் ஒன்றை அரசு கொண்டு வந்தாலும்,பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா 24மணித்தியாலத்துக்குள் கலைத்துவிட்டு நாட்டில் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு உத்தரவிடுவார் என்று பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் மக்களைச் சந்தித்து இன்றைய அரசியல் நிலை பற்றிக் கலந்துரையாடிய போதே அநுராபண்டாரநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

அபிவிருத்தி லொத்தர் சபையைத்

(10ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க அபிவிருத்தி முகவர்குழு திடீரென நேற்று யாழ். வந்தது!

(தென்மராட்சி)

அமொிக்க சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலைய,பிரதி நிர்வாக அதிகாரி பிரெட்றிக் டபிள்யு சியெக் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற் கொண்டு யாழ்.குடாநாட்டு நிலைமைகள் குறித்து ஆராய்ந்து சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் வருகை தந்த இக் குழுவினர் யாழ்.அரச செயலகத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன், திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

எதிர்வரும் திங்கட்கிழமை யப்பானில் ஆரம்பமாகவுள்ள இலங்கைக்கு உத்வி வழங்கும் மாநாட்டிற்கு முன்னதாக,யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளபபட வேண்டிய அபிவிருத்தி, புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான மதிப்பீடு ஒன்றைப் பெறும் பொருட்டே இவர்களது யாழ் .விஜயம அமைந்திருந்தது.

இக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் மீளக்குடியமர்ந்து வரும் பகுதிக்குச் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டதுடன் தென்மராட்சிப் பகுதிக்கும் சென்று அங்கு இடம் பெற்று வரும் மிதி வெடி அகற்றும் நடவடிக்கைகளையும் யுத்தத்தின் கோரத்தாக்கத்தையும் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இக் குழுவினர் கடந்த சனிக்கிழமை கொழும்புக்கு வருகை தந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-77,43)

## யாழ்.பொலிஸாரால் ஆவணங்கள் இல்லாத மோ.சைக்கிள்கள் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

தலைக்கவசம் அணியாமலும், மோட்டார் சைக்கிளுக்குரிய ஆவணங்கள் எதுவும் இன்றியும் மோட்டார் சைக்கிள் ஓட்டிச் சென்ற 5 பேரினது மோட்டார் சைக்கிள்கள் நேற்று இரவு பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

இச் சம்பவம் நேற்றிரவு 10 மணியளவில் தட்டாதெருச் சந்தியில் இடம் பெற்றது.யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.கே.ஆனந்த செனவிரட்ண தலைமையிலான பொலிஸ குழுவே மேற்படி 5மோட்டார் சைக்கிளையும் பறிமுதல் செய்ததுடன் அவற்றை யாழ்.பொலிஸ் நிலையத்திற்கும் கொண்டு சென்றது. (த)

## யாழ்.நகைக்கடை ஊழியர் இரவு வேளை மர்ம மரணம்!

### அடுத்தடுத்து இரண்டு சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் தொழில் புரியும் ஊழியர் ஒருவர் நேற்று முன் தினம் இரவு மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இம்மர்ம மரணத்தை அடுத்து யாழ்.நகரப் பகுதி எங்கும் பெரும் பரபரப்பும் அச்சமும் பரவியுள்ளது.

மணகும்பானைச் சொந்த இடமாகவும,தற்போது சட்டநாதர் கோயில் வீதி நல்லூரில் வசிப்பவருமான பாலச்சந்திரன் ராகவன் (வயது19) என்ற இளைஞனே மர்மமான முறையில் உயிரிழந்தவராவார்.

சம்பவ தினத்தன்று இரவு நண்பர்களுடன் கதைத்துவிட்டு தான் தொழில் புரியும் கடையின் மேல் மாடியில் உறங்குவதற்குச் சென்றவர் நேற்றுக் காலை பார்த்த போது அறையில் உயிரிழந்து கிடக்கக் காணப்பட்டார்.(10ம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டில் தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் இன்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாளின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று ''நிலம் காக்கும் நிறைவான கல்விக்கு வித்திடுவோம்'' என்ற தொனிப் பொருளில் இடம் பெறவுள்ளது.

இதனையொட்டி வலிகாம் வடமராட்சி,தென்மராட்சி,தீவகம் ஆகிய நான்கு பிரதேசங்களிலும் மு.ப.10.00 மாணவர் எழுச்சிப் பேரணிகள் இடம் பெறவுள்ளன.

வடமராட்சியில் நெல்லியடி நாவலர் மடத்திலிருந்து ஆரம்பமாகும் எழுசசிப் பேரணி,நெல்லியடி மத்தியமாக வித்தியாலயத்தைச் சென்றடைந்து,இரவு 7மணிக்கு அங்கு கலை நிகழ்வுகள் இடம் பெறும்.

தென்மராட்சியில் மீசாலைச் சந்தியில் இருந்து ஆரம்பமாகும் எழுச்சிப் பேரணி,சாவகச்சேரி இந்து கல்லூரியைச் சென்றடையும்.

வலிகாமத்தின் எழுச்சிப் பேரணி யாழ்.மத்திய கல்லூரியிலிருந்து

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இன்று ஒரு தகவல்

### புத்தகப் புழுக்கள்!

'பத்துவருஷசத்துக்கு முன்னர் வாங்கிய திருக்குறள் புத்தகம் சார் இது. இன்னமும் பத்திரமாக வைத்திருக்கிறேன்' என்று சொல்வது சரி.பத்து வருஷத்துக்குமுன் வாங்கிய நியூஸ் பேப்பர் சார் இது. இன்னமும் பத்திரமாக வைத்திருக்கிறேன் பாருங்கள்' என்று சொன்னால் அது சரியாக இருக்குமா? படிப்பதில் சில வகை உண்டு. அதைப்பற்றி ஆங்கில அறிஞர் பேக்கன் சொல்லியிருக்கிறார்.

'நூல்களில் பல வகைஉண்டு. அதிலே சிலவற்றை ருசி பார்க்கவேண்டும். சில வற்றை அப்படியே விழுங்கி விட வேண்டும். சில வற்றைச் சுவைத்துஅப்படியே ஜீரணம் பண்ணி விடவேண்டும் என்று அவர் சொல்லியிருக்கிறார்.அவர் சொன்ன பிரகாரம் மனிதன் நடந்துகொள்கிறானோ இல்லையோ, பூச்சிகள் அவர் வார்த்தைக்கு அப்படியே மரியாதை கொடுத்துக் கொண்டிருக்கின்றன. எவ்வளவு பெரிய மனிதன் எழுதிய புத்தகமாக இருந்தாலும் சரி,பூச்சிகள் மிகவும் சுலபமாக அரித்துச்சாப்பிட்டு விடும்.

'இந்தப் புத்தகத்தை அப்படியே கரைத்துக்குடித்திருக்கிறேன் சார்' என்று நாம் மார்பு தட்டிக்கொள்வது உண்டு. அப்படிச் செய்யாமல் அதை பயிற்சியாகச்செய்வது புத்தகப் புழுக்கள் தாம். இந்தப்பூச்சிகளில் பலவகை உண்டு. சரி... இந்தப் பூச்சிகளிட மிருந்து புத்தகங்களைக் காப்பாற்றுவது எப்படி? புத்தகங்களை அடுக்கி வைக்குமிடத்தில் நல்ல காற்றோட்டம் இருக்கவேண்டும். வெளிச்சம் இருக்க வேண்டும். புத்தங்களைத் தரையில் அடுக்கி வைக்கக் கூடாது.சுவரில் ஒட்டினாற்போலவும் வைக்கக்கூடாது.

மண்ணெண்ணெய் வாசனை இருந்தால் கறையான் கிட்ட நெருங்காது.நப்தலின் உருண்டைகள் போடலாம். அதற்கென்று சில கிருமிநாசினிகள் உண்டு. அதை தூவலாம் அல்லது தெளிக்கலாம். நூல்கள் அழிவதைத் தடுப்பதற்கு மேல் நாடுகளில் என்ன பண்ணுகிறார்கள் தெரியுமா?கிருமி நாசினியை அச்சடிக் கிறமையிலேயே கலந்து விடுகிறார்கள். நம்நாட்டில் பல நூல்களைக் கட்டஅதாவது பைன்ட் பண்ண உபயோகிக்கிற துணியை சிவப்பு அல்லது மஞ்சள் நிறத்தில் நனைத்து எடுத்து விடுகிறார்கள். நிறத்தை ஏற்றுகிறபொழுது கலக்கும் பொருளில் கிருமி நாசினியின் சக்தி இருக்கின்றது. அதனால் நூல்கள் சேதமடைவதில்லை

மனிதனுக்கு வியாதி வந்தால் ஒதுக்கி வைத்து விடுகின்றோ மல்லவா? அது மாதிரி புத்தகத்துக்கு வியாதி வந்தாலும் ஒதுக்கி வைத்து விடவேண்டியது தான். மனிதனுக்குப் பண்ணுகின்ற மாதிரியே புத்தகத்துக்கும் வைத்தியம் பண்ணவேண்டும். முதலில் நோய்பரவுகின்ற வகையைத் தடைப்படுத்தவேண்டும். அதன் பின் நோய்க்குச் சிகிச்சை அளிக்க வேண்டும். இதற்கென்றே சில மருத்துவர்கள் இருக்கிறார்கள். 'நூல் நோய் மருத்துவர்கள்.

லெனில் மாநில நூலகம் மிகவும் பெரியதாம்.அதனால் தினசரி பயனடைகின்ற வாசகர்கள் 8000 பேர்களாம். அந்த நூலகத்தில் இருக்கின்ற அடுக்குகளின் நீளம் எவ்வளவு தெரியுமா? 200மைல்! ஆமாம்.அவ்வளவு பெரிய நூலகம் அதில் நூல் நோய் மருத்துவர்கள் 200 பேருக்கு மேல் இருக்கிறார்களாம். பொலிவும்,வலுவும் இழந்து நலிந்து போன புத்தகங்களுக்கு ஊட்டமும் சிகிச்சையும் கொடுத்து நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவதுதான் அவர்களுக்கு வேலையாம்.

இன்னொரு விஷயம் தெரியுமா உங்களுக்கு? புத்தகங்கள் மூலமாக்கூட வியாதிகள் பரவும்.நூல்கள் மூலமாக அம்மை, குளிர் ஜுரம் போன்ற நோய்கள் பரவுவதை அவர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.சில சமயம் அந்த வீட்டில் இருக்கிற புத்தகங்களை நோய் கண்டவர்கள் கொளுத்தி விடுவதும் உண்டாம் . இத்தாலியில் ஒருசோதனை நடத்தினார்களாம். எலும்புருக்கி நோய் புத்தகங்கள் மூலமாக பரவுவது இல்லை என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ஆகவே புத்தகத்தைப்படித்து விஷயம் தெரிந்து கொள்வது ஒரு பக்கம். இருந்தாலும்,படிக்காமல் அதைப்பற்றி தெரிந்து கொள்ளவேண்டிய விஷயமும் நிறைய இருக்கிறது. இன்னொரு முக்கியமான விஷயமும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது புத்தகத்தை ஒருவரிடம் கடன் கொடுத்தால் அதை அவரிடம் இருந்து திருப்பி வாங்குவது எப்படி? இது மிகவும் முக்கியம்.

ஒருவர் இருந்தார்.மிகவும் கண்டிப்பான பேர்வழி .அவர் வீட்டில் ஒரு நூல் நிலையம் வைத்திருந்தார்.எல்லாப் புத்தகங்களும் இருந்தன.பக்கத்துவீட்டுக்காரர் வந்து ' சார்! ஒரு நாவல் கொடுங்கள்.எடுத்துக்கொண்டுபோய் படித்து விட்டு திருப்பி பத்திரமாக கொண்டுவந்து கொடுத்துவிடுகிறேன்' என்று கேட்டார். அதறகு இவா 'உங்கள் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு போகவேண்டாம்.இங்கேயே வாருங்கள்.இங்கேயே உட்கார்ந்து படியுங்கள். படித்ததும் புத்தகத்தை திருப்பிக் கொடுத்துவிட்டுப்போங்கள் .அது தான் நல்லது'என்றார். சரி என்று அப்படியே செய்தார் அவர்.

கொஞ்ச நாட்கள் கழித்து. இவர் அவரது வீட்டுக்குப் போனார். 'ஒட்டடைக்குச்சி இருந்தால் கொஞ்ச நேரம் இரவல் கொடுங்கள்' என்று கேட்டார்.இதற்கு அவர் 'உங்கள் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போகவேண்டாம். இங்கேயே வாருங்கள். இங்கேயே ஒட்டடை அடியுங்கள்! வேலை முடிந்ததும் திருப்பிக்கொடுத்து விட்டு போங்கள். அது தான் நல்லது'! என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# வடகிழக்கு இடைக்கால நிர்வாகம் புலிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்

## தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை பிரதமருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் கையளிக்கப்பட வேண்டுமெனக் கோரி தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவுக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பேரவைத்தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர், நாம் எதிர்பார்த்த பல விளைவுகள் இன்னும் நடைபெறவில்லை. படையினர் தொடர்ந்தும் மக்கள் வாழும் பிரதேசங்களிலே நிலை கொண்டிருப்பதால் எம்.மக்களுடைய மீள் குடியேற்றம் தடைப்பட்டுள்ளது.

புனர்நிர்மாணப்பணிகள் நிதி முடக்கத்தால் கேள்விக்குரியன வாய்யுள்ளன. உயர் பாதுகாப்பு வலயங்கள் பல மக்கள் குடியேற வேண்டிய நல்ல நிலங்களையெல்லாம் உள்ளடக்கியதாயுள்ளது.இந்த வேளையிலேயே வடக்கு- கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய ஒரு தார்மீகக்கடமை அரசுக்கு உண்டு.

யாழ்ப்பாண மாவட்டக்கல்வி மேம்பாட்டுபேரவையைச்சேர்ந்த நாம் அரசிடம்கேட்டுக்கொள்வது, இடைக்கால நிர்வாகம் ஒன்றின் கீழ் வடக்கு-கிழக்கினைக் கொண்டு வருதல், அந் நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்தல் ஆகியனவற்றை உடனடியாகச் செயற்படுத்தவேண்டும் என்பதே.

சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு மேற்படி நடவடிக்கை பெருத்தமானதென நம்புகிறோம். இதன் மூலம் தமிழ் மக்கள் அரசின் மீது நம்பிக்கைகொள்ளுதற்கு வழி செய்யலாம்.

எங்களுடைய மண்ணிலே வாழும் மக்களுடைய வாழ்க்கையை உயர்த்தவும் மண்ணினுள் அழிந்து போன கட்டடங்களை புனர்நிர்மாணம் செய்வதற்குரிய திட்டங்களை வரையவும் அவற்றைச் செயற்படுத்தவும் அதிகாரமுள்ள நிர்வாகம் ஒன்று மிக அவசியமானதாகும். அதனை வழங்கித் தமிழ் மக்களுடைய அபிலாஷையை பூர்த்தி செய்ய வேண்டும் என யாழ்ப்பாண மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினராகிய நாம் கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள்நோர்வே தூதரகம்,போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆகியவற்றுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (து)

## இராசி பலன்

**06.06. 2003**

**(வைகாசி 23, வெள்ளி)**

**சஷ்டி-ந.ப. 12.15 வரை**
**ஆயிலியம்- காலை 6.36 வரை**
**இராகுகாலம்- 10.22-11.52**
**சுபநேரம்- 5.52-7.22**

**மேடம்**
மாதர் நட்பு. வியாபார நன்மை, போசனசுகம், சிறுவியாதி

**இடபம்**
புது விடயம் அறிதல், விரும்பாத உறவு, முயற்சி தாமதம், பயந்த சுபாவம்

**மிதுனம்**
காரிய அனுகூலம், வாக்கு மேன்மை, பொருள் சேர்க்கை, சகோதரர் உதவி

**கடகம்**
அதிக செலவு, காரிய தாமதம், கௌரவக் குறைவு, விவாதம்.

**சிங்கம்**
ஜனவசியம், புதியமுயற்சி. நிலைமாற்றம், தெய்வதரிசனம்

**கன்னி**
பிதாவழி உறவு, சுப செலவு, எதிர்பாராத நன்மை, முயற்சிதாமதம்

**துலாம்**
தெய்வதரிசனம், மனமகிழ்ச்சி, காரியசிந்தை, தொழில்வருமானம்,

**விருச்சிகம்**
சுபநிகழ்வு, கடினஉழைப்பு, நண்பர்கள் உதவி, காரிய அனுகூலம்

**தனுசு**
ஆன்றோர் மதிப்பு, பிரயாணம், புதிய திட்டமிடல், வீண்அச்சம்

**மகரம்**
காரியத் தடங்கல், எதிர்பாராத மனஸ்தாபம், ஆரோக்கியக்குறைவு, போசனசுகம்

**கும்பம்**
களஸ்திர நன்மை, தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், தனவரவு

**மீனம்**
நினைத்தகாரியம் கைகூடும், போசனசுகம், சத்துருஜெயம், சுகவாழ்வு

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# உடத்தலவின்ன படுகொலை சம்பவத்தில் தப்பியவர் சாட்சியம்

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதி மன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உடத்தலவின்ன படுகொலை விசாரணையின் போது,கடந்த 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் திகதி இடம்பெற்ற 10 முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை சம்பவத்தின் போது தப்பிப்பிழைத்தவர்களில் ஒருவரான அப்துல் அசீஸ் முகமட் சாட்சியம் அளித்தார்.

அவர் தனது சாட்சியத்தில்,

மதீனா பாத்திமாக்கல்லூரி வாக்குப்பதிவு நிலையத்தில் நான் கடமையாற்றினேன். 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது பொ. ஐ.மு ஆதரவாளர்கள் வாக்குச சாவடிக்குள் புகுந்து கள்ள வோட்டுக்கள் போட்டதுடன், வெடி குண்டுகளையும் வீசி விட்டுச் சென்றனர்.

அத்தகைய சம்பவம் 2001ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலிலும் நடைபெறக்கூடாது. என்பதற்காகவே வாக்குப்பெட்டிகளை கொண்டு சென்ற பஸ் வண்டியை பின் தொடர்ந்தோம்.

எங்களது வான் வாக்குப் பெட்டிகளை கொண்டு சென்ற பஸ் வண்டியை பின் தொடர்ந்து செல்கையில் 3 டிபென்டர் வாகனங்கள் எம்மை பின் தொடர்ந்தன.

அந்த வாகனங்கள் எமது வானுக கருகில் வந்தவுடன் அதிலிருந்து இறங்கியவர்கள் எமது வானை நோக்கி சரமாரியாகச் சுடத்தொடங்கினர்.வானுக்குள்புகுந்து சுடத் தொடங்கியதும் நாங்கள் கண்களை மூடிக்கொண்டோம்.

நான் அருகில்இருந்தவர்களிடம் 'அல்லாவை நினைத்துக் கொள்ளுங்கள் நாங்கள் பிழைக்கப் போவதில்லை' என்று கூறினேன். அப்போது சாட்சி அழத்தொடங்கினார். இதனால் நீதிமன்றம் 15நிமிடத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ)

# இரா.சம்பந்தன் இந்தியா பயணம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகமும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்று முன்தினம் இந்தியாவுக்கு சென்றுள்ளார்.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றிருக்கும் இவர், சில தினங்கள் அங்கு தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவர் இந்தியா சென்றுள்ளமையினால் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுக்கூட்டம் நடைபெறவில்லை என கூட்டமைபு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-10)

## பாடசாலைகளை யுனிசெவ் புனரமைப்பு

(கொழும்பு)

வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகளினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை புனரமைக்க யுனிசெவ் நிறுவனம் முன்வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட பாடசாலைகளை புனரமைப்பதற்கு தேவையான முழுத் தொகையையும் வழங்குவதற்கு இந நிறுவனம் முன்வந்துள்ளதாக அமைசசர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார். (தி)

# உலக வங்கி அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளார்கள்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் நியாப் திட்டத்தின் தற்போதைய நிலைப்பாடு பற்றிய தளநிலையை நேரில் ஆராயும்பொருட்டு, உலக வங்கியைச்சேர்ந்த இரு உயர் மட்ட அதிகாரிகள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தனர்.

இவ்விரு உயர் அதிகாரிகளையும் யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதி பொ.விக்கினேஸ்வரன் சந்தித்து, குறித்த திட்டத்தில் ஏற்பட்ட தடங்கல்கள் பற்றி எடுத்துக் கூறியிருந்தார்.

அதே சமயம்,இங்கு இரு உயர் அதிகாரிகளும் யாழ்.அரச அதிபர் செ. பத்மநாதன் மற்றும் நியாப் உதவிப்பணிப்பாளர் கே. பாலகிருஸணன் ஆகியோரை சந்தித்தனர்.

அத்துடன்,இக்குழுவினர் இருபாலை, காரைநகர் ஆகிய இடங்களில் உள்ள உவர் நிலத்தடுப்பு அணைகளையும் பார்வையிட்டனர்.

இன்று அனுராதபுரத்தில் நடைபெறவுள்ள நியாப்திட்ட மதிப்பிட்டுக் குழுவின் கூட்டத்தில் யாழ்.மாவட்டத்துக்கான நியாப்திட்டம் பற்றிய முக்கிய தீர்மானம் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (த-77)

**நாட்டின் நலன் பேண**
**காட்டின் வளம் பேணு**

# இடைக்கால நிர்வாகசபை புலிகள் வசமாவது அவசியம்

## இந்து குருமார் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபையைப் புலிகளிடம் கையளிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி இலங்கை இந்துமத குருமார் ஒன்றியம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது

அவ்வறிக்கையில்,

இலங்கையில் நீண்டகாலமாக நீடித்து வந்த இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வுகாணலாம் என்ற கடந்தகால அரசின் கொள்கையால் விலைமதிக்க முடியாத உயிரிழப்புக்களும் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் சொத்துக்களும் அழிக்கப்பட்டு, சொந்த மண்ணிலேயே அகதிகளாக வாழும் நிலைமட்டுமே எமக்கு எஞ்சியது.

இந்நிலையில், இந்நாட்டு சகல இன மக்களினதும் ஆணைப்படி ரணில் விக்கிரமசிங்க அரசு ஆட்சியைப் பொறுப்பேற்று, தமிழர் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் சுதந்திரமாக வாழ பல உயிர்களை காணிகையாக்கிய தலைவர் வே.பிரபாகரனுடன் சமாதான உடன்படிக்கையை கைச்சாத்திட்டு இருதரப்பினரும் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டமை வரவேற்கத்தக்க விடயம்.

இதனால்,தமிழ் மக்கள் தமக்கு ஓர் விடிவுகாலம் ஏற்பட்டு யுத்தமின்றி சுதந்திரமாக வாழ்வோம் என எதிர்பார்க்கும் இவ்வேளையில், இச் சமாதானம் நீடிக்குமா என்ற ஏக்கம் மக்கள் மனதில் ஏற்பட்டுள்ளது.

சர்வதேச சமுகம் இலங்கையில் சமாதானம் ஏற்பட்டுவிட்டதென வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு புனாவாழ்வு, புனரமைப்புக்களுக்காக பெருமளவு நிதி வழங்க முன்வந்துள்ளது.

இந்நிலையில், இந் நிதியைச சரிவரக் கையாள வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை புலிகள் வசம் கையளிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## உள்ளூராட்சி சட்டமூல

# விவாதத்தை முன்வைக்குமாறு நீதிமன்றம் பணிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலத்திற்கு எதிராக சமர்ப்பித்த மனு தொடர்பான வாதத்தை முன்வைக்குமாறு கொழும்பு உயர் நீதிமன்றம் சட்டமா அதிபரை பணித்துள்ளது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் எதிர்வரும் 25ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்துவதற்கு ஏதுவாக அச்சட்டமூலத்தில் திருத்தங்களைக் கொண்டுவரும் வழிவகைகள் குறித்து திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்காக அரசாங்கம் இச்சட்டமூலத்தை சமர்ப்பித்தது.

அதற்கு எதிராகத் தாக்கல் செயயப்பட்ட மனுவில் உத்தேசத் திருத்தங்களின் மூலம் ஏற்கனவே கோரப்பட்ட வேட்பு மனுக்களை ரத்துச் செய்து புதிதாக நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யுமாறு கோரும் அதிகாரம் ஆணையாளருக்கு உண்டு.

இது அரசியல் யாப்புக்கு முரணானதால் உத்தேச சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறவேண்டும். அத்துடன், மக்கள் கருத்துக் கணிப்பீடுமூலம் அதனை அங்கீகரிக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, ரியானி பண்டாரநாயக்க, அசோக டீ சில்வா ஆகிய மூன்று நீதியரசர்கள் கொண்ட ட்ரயல் அட்பாரில் இது இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

# மக்களின் பங்களிப்புக்கள் இல்லாத திட்டங்களே தோல்வியை தழுவுகின்றன

## சப்னா நிறுவன பொருளியலாளர் எஸ்.பி.விக்கிரமராச்சி

மக்கள் ஜடப்பொருட்களல்ல. அவர்களிடம் இருக்கும் அனுபவங்கள், ஆக்கத்திறன்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வறிய மக்களின் திறமைகளை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதன் மூலமே சமுதாயத்தில் மாற்றத்தினை ஏற்படுத்திக் கொள்ள முடியும். மக்களுக்குச் சேவை செய்வதற்கு சான்றிதழ்கள் மட்டும் போதாது. மக்களின் உணர்வுகள், தேவைகளை அவர்களின் நிலையிலிருந்து புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு சப்னா நிறுவனத்தின் பொருளியலாளரான எஸ்.பி. விக்கிரமராச்சி யாழ்ப்பாணத்தில் உள்ள ஜேர்மன் ஒத்துழைப்பு நிறுவனத்தில் கடந்த புதனன்று இடம்பெற்ற சமூக அணிதிரட்டல் பற்றிய கருத்தரங்கில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த பேராசிரியர் வீ.அருள்நநதி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 9 உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தனர்.

பொருளியலாளர் எஸ்.பி.விக்கிரமராச்சி அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது,

சமூக அணிதிரட்டல் மூலம் வறிய மக்களை இனங்கண்டு, அவர்களுடன் ஒருவனாகி அவர்களை ஊக்கப்படுத்தி வறுமைக்கான காரணங்களை அறிந்து அவற்றினைத் தீர்க்கப் பாடுபட வேண்டும். எமது நாட்டில் அமுல் செய்யப்படும் திட்டங்களில் மக்களின் உண்மையான பங்கேற்புகள் ஆரம்பம் முதல் இல்லாமையாலேயே திட்டங்கள் தோல்வியைத் தழுவுகின்றன.

கோடிக்கணக்கான நிதியையும் காலத்தையும் விரயம் செய்வது தான் நாம் கண்டுகொண்ட வரலாறு.

நாட்டில் வறுமை ஒழிக்கப்படவோ அல்லது குறைக்கப்படவோ வேண்டுமாயின் வறிய மக்கள் மத்தியில் அணிதிரட்டல், உணர்வூட்டல், அமைப்புக்குட்படுத்தல், பெருக்கம் ஆகிய நான்குபட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் வலுப்பெற்று அவர்களில் தேங்கிக்கிடக்கும் ஆக்கத்திறனை வெளிப்படுத்த முடியும்.

இன்றைய நிலையில் வறுமை, பட்டினி காரணமாக' மக்களிடம் இருக்கும் ஆக்கத்திறன்கள் மழுங்கடிக்கப்படுகின்றன. சமூக அணிதிரட்டல் பணிகள் இல்லாமையினாலேயே பெரும்பாலான அரச மற்றும் சர்வதேச நிறுவனங்களினால் அமுல் செய்யப்படும் திட்டங்கள்யாவும் படுதோல்வியில் முடிகின்றன.

திட்டங்கள் அமுல் செய்யப்படுகின்றன என்ற பெயரில் உயர்மட்ட அதிகாரிகள் தம்மை வளம்படுத்தலிலும் தமது விருப்புகளை ஈடேற்றுவதிலுமேயே கருத்தாக உள்ளனர். இதுதான் இன்று ஆசிய நாடுகளில் இடம்பெற்றுவரும் வழமையான நிகழ்ச்சியாகும். இதில் ஒரு நல்ல ஆக்கபூர்வமான மாற்றத்தினை ஏற்படுத்தி வறிய மக்களின் வாழ்க்கையில் ஒரு அர்த்தமுள்ள முயற்சியையும், வளர்ச்சியையும், மாற்றத்தினையும் ஏற்படுத்துவதில் இன்று ஜேர்மன் ஒத்துழைப்பு நிறுவனம் (ஜீ.ரி.சற்) அரும்பாடுபட்டு வருகின்றது. இதனை நாம் கவனத்தில் கொண்டு - வறிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும் எனக் கூறினார்.

சப்னா நிறுவனத்தைச் சேர்ந்த பொறியியலாளரான வீ.சுப்பிரமணியம் அங்கு குறிப்பிடும்போது,

யாழ்ப்பாணம் யுத்தத்திற்கு முன்பு இருந்ததை விட இப்போது பாரிய மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளது. இங்கு பல திட்டங்கள் அமுல் செய்யப்படவேண்டிய நிலை காணப்படுகின்றது. மக்களின் சமூக, பொருண்மிய, சுகாதார மற்றும் கல்விசார் நிலைகளில் மக்கள் ஒடிந்தும் நெடிந்தும் போயுள்ளனர். மக்களுக்கான திட்டங்களை குளிரூட்டிய அறைகளில் இருந்து தீட்டக்கூடாது.

மக்களிடம் நேரடியாகப் போக வேண்டும். அவர்களுடன் மனம் விட்டுக் கதைத்து உறவாடவேண்டும். அவர்களது பிரச்சினைகள், தேவைகளை அவர்களுடைய நிலையில் இருந்து புரிந்துகொள்ள வேண்டும். மக்களிடம் அதிகார தோரணையுடன் அணுகக்கூடாது வறிய மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதன்மூலம் தான் சமுதாயத்தினை முன்னேற்றவும் அபிவிருத்தி செய்யவும் முடியும் என்பது அனுபவரீதியாகக் கண்ட உண்மையாகும் எனக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சமூக அணிதிரட்டல் மூலமான திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு மொத்தமாக 9 உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களை ஜேர்மன் ஒத்துழைப்பு நிறுவனம் (ஜீ.ரி.சற்) தனது பங்காளித்துவ நிறுவனங்களாக இணைத்துக் கொண்டுள்ளன.

இக்கருத்தரங்கில் ஜீ.ரி.சற் நிறுவனத்தின் வெளிக்கள அணித் தலைவர் கலாநிதி அடிவாக்கரும் கருத்துரையாற்றினார் என்பது குறிபபிடத்தக்கதாகும். (உ-77)

# இரத்தினபுரி மாவட்டத்தில் மீண்டும் பெருமழை, ஆங்காங்கே மண்சரிவு

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த பெருமழையால் மீண்டும் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரியில் உள்ள சமரகந்த என்னும் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை பெரும் மழைபெயதது. அதனைத் தொடர்ந்து இப் பிரதேசத்தின் பல இடங்களிலும் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன என்றும தெரிவிக்கப்படுகின்றன.

மேலும், சமரகந்த, ஹெந்தான பகுதியில் உள்ள தேயிலைத் தொழிற்சாலைக்கு அருகில் உள்ள மலையில் பாரிய வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதால் இப்பிரதேசத்தில் உள்ள 20குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

நாவலகந்த பாடசாலைக்கு அருகில் உள்ள மலையடிவாரத்திலும் மண்சரிவுகள் இடம்பெற்றதாகவும் அதனால் அப்பாடசாலை மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம், கடந்த மாதம் 18 ஆம் திகதி கண்டி மாத்தறை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் பெருமழையும், பாரிய மண்சரிவும் ஏற்பட்டதுடன், பல நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்ததுடன், பெரும் சொததிழப்பு ஏற்பட்டது தெரிந்ததே.(உ-10)

# செய்தித் துளிகள்

### வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளது. தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே எதிர்வரும் 13,14 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (உ-10)

* * *

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணை ஓட்டுமடம் சந்தியிலுள்ள ஞானவைரவர் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (உ-10)

### மணவாளக்கோல விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு அத்தித் தோட்டம் பரமேஸ்வரி அம்பாள் ஆலய மணவாளக் கோல விழா நேற்றுமுதல் தொடர்ந்து 10 நாட்கள் வரை நடைபெறவுள்ளது.

இறுதி நாளான எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுவாமிக்கு 108 சங்குகளால் சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து இந்து கலாசார அமைச்சரின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (உ-10)

### வெள்ளோட்டம்

(கல்வயல்)

நல்லூர் தெற்கு கற்பகவிநாயகர் ஆலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா எதிர்வரும் 11ஆம்திகதி புதன் கிழமை பி.ப.2.00மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ-36)

### கொடியேற்றம்

(கல்வயல்)

கொழும்புத்துறை மேற்கு விநாயகராலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10தினங்கள் இடம்பெறவுள்ளது: (உ-36)

### பொங்கல் உற்சவம்

(திருநெல்வேலி)

திரியாய் அம்மன் ஆலய பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெறவுள்ளது.

கடந்த 3 வருடங்களின் பின்னர் இவ்வாலயத்தில் பொங்கல் உற்சவம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ- 43)

### நடமாடும் செயலக சேவை

(கல்வயல்)

தென்மராட்சி பிரதேச செயலகம் ஒவ்வொரு மாதத்திலும் முதல், இறுதிச் செவ்வாய்க் கிழமைகளில் கொடிகாமப் பிரதேச சபைக் காரியாலயத்தில் நடமாடும் செயலக சேவையை நடாத்தி வருகின்றது. இதன்மூலம் கொடிகாமத்தில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயனடைந்து வருகின்றனர். (உ-36)

### தகவல் தொ.நு உச்சிமாநாடு

(கொழும்பு)

சர்வதேச தகவல்தொழில் நுட்ப உச்சிமாநாடு இவ்வாண்டு டிசம்பர் மாதம் ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபன பிரேரணைக்கு அமைய சர்வதேச தொலைத தொடர்புச் சங்கம் இதனை ஒழுங்கு செய்துள்ளது.

20ஆயிரத்துக்கும் அதிகமான அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் கலந்துகொள்ளவுள்ள இந்மாநாட்டின் தொனிப்பொருள் ''அபிவிருத்திக்கான தகவல் தொழில் நுட்பம்'' என்பதாகும். (தி)

### குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு

(கொழும்பு)

இன்னும் 47 வருடங்களுக்குள் உலக நாடுகள் பலவற்றில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும் என சுற்றாடல் இயற்கைவள அமைச்சின் செயலாளர் ஹேவகே தெரிவித்துள்ளார்.

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கொழும்பு விகாரமாதேவி விகாரையில் கண்காட்சி ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், 2050 ஆம் ஆண்டுகளில் 66 நாடுகளைச் சேர்ந்த 250 கோடி மக்கள் குடிநீர் இன்றி அவதிப்பட நேரிடும் எனவும் எச்சரித்துள்ளார். (தி)

### கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை பரிபேதுரு கில்னர் பாலர் பாடசாலைச் சிறார்களின் ஆக்கங்கள் அடங்கிய கல்விக் கண்காட்சி இன்று காலை 9.00 மணிமுதல் பி.ப. 1.00மணிவரை இடம்பெறவுள்ளது.

வணபிதா கே.கருணசேகரா இக் கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (உ)

### முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு

(திருநெல்வேலி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் மறைந்த மு.சிவசிதம்பரத்தின் முதலாம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்றன.

த.கனகசபாபதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கூட்டணி உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர். (உ-43)

### புதிய நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கண்டுப் புளியடி சிவ உக்கிர வீரபத்திரர் ஆலய பரிபாலன சபைக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றபோது சபையின் தலைவராக சோ.கைலாசநாதன், செயலாளராக இ.தருமலிங்கம், பொருளாளராக ஆ.சிவகுருநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-10)

### மக்கள் வங்கி பரந்தன் கிளை தர்மபுரத்தில்

(யாழ்ப்பாணம்)

கடந்தகால போர் அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த மக்கள் வங்கி பரந்தன் கிளை, தொடர்ந்தும் தர்மபுரத்தில் முல்லைத்தீவு வீதியிலேயே இயங்கி வருவதாக அதன முகாமையாளர் பொன் கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (உ)

### விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் பயிற்சி அமைச்சு, இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், கொழுமபு உயர் தொழில்நுட்பநிறுவனம் ஆகியவற்றில் பொறியியல் கற்கை நெறியில் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்குரிய விண்ணப்பங்களை எதிர்வரும் யூலை மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம, இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம், 98 வாட்பிளேஸ், கொழும்பு - 7 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். மேலதிக விபரங்களை வலம்புரிக் காரியலயத்திலும் பார்வையிடலாம். (உ)

### நிரந்தரமாக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தரம் 1, தரம் 2ஐச் சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தர்களை அரச சேவையில் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள மேற்படி உத்தியோகத்தர்களையே நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தகைமையுடையவர்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலரிடம் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்து அரச அதிபரூடாக சமுர்த்தி ஆணையாளருக்கு அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ-7)

### நாடுதிரும்பியவரிடம் கஞ்சா கண்டுபிடிப்பு

(நெடுந்தீவு)

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய இலங்கை அகதி ஒருவரிடமிருந்து 300 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்தியாவில் இருந்து புறப்பட்ட 26 குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர் நேற்றுக்காலை நெடுந்தீவு மேற்குப் பனங்காணி கடற்கரையில் வந்திறங்கினர்.

இவர்களிடம் நெடுந்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோதே ஒருவரிடம் கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. (உ-126)

# ஈரான் மீதான தாக்குதல் தற்கொலை முயற்சிக்கு ஒப்பானது

## அமெரிக்காவை எச்சரிக்கிறார் ஆன்மீகத் தலைவர்

(தெஹற்ரான்)

ஈரான் மீது இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், அது ஒரு தற்கொலை முயற்சியாகவே அமையும் என்று ஈரானின் ஆத்மீகத் தலைவர் ஆயத்துல்லா அலிகொமேய்னி அமெரிக்காவை எச்சரித்துள்ளார்.

ஈரானின் முன்னாள் தலைவர் ஆயத்துல்லா இ∴குல்லா கொமேய்னி 14 வது ஆண்டு நினைவு தின உரையின் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை, பயங்கரவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஈரான் ஒரு சொர்க்கபுரியாக விளங்குகின்றது என்ற அமெரிக்காவின் குற்றச்சாட்டில் எந்தவித உண்மையும் இல்லை என்று கொமேய்னி மறுத்துள்ளார்.

ஈரான் மீது அமெரிக்கா குற்றம் சாட்டுவது புதியதொரு விடயம் அல்லவென்றும் இஸ்லாமியப் புரட்சி இடம்பெற்ற நாள் முதல் அமெரிக்கா தொடர்ந்து ஈரான் மீது குற்றம் சாட்டி வருகின்றது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பயங்கரவாதத்திற்கு உதவி வழங்கி வருவதாக ஈரானை, அமெரிக்கா உலகளாவிய ரீதியில் விமர்சித்து வருவது ஒரு வெட்கக்கேடான செயல் என்றும் ஆயத்துல்லா அலி கொமேய்னி மேலும் குற்றம் சுமத்தியுள்ளார். (உ-9)



பனாமாவில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற உலக அழகிப் போட்டியில் உலக அழகியாக தெரிவு செய்யப்பட்ட டொமினிக்கன் குடியரசின் அமிலியா வேகாவுக்கு கிரீடம் சூட்டுகிறார் முன்னாள் உலக அழகி ஜஸ்டின் பெசக்

# முஸ்லிம் தீவிரவாதிகளால் அல்ஜீரிய பாதுகாப்புப் படைகளுக்கு அச்சுறுத்தல்

(அல்ஜியர்ஸ்)

அல்ஜீரியாவில் தடை செய்யப்பட்ட முஸ்லிம் தீவிரவாத இயக்கத்தினர் நேற்று முன்தினம் 8 பொலிஸ் உத்தியோகஸ்தர்களை கொலை செய்துள்ளனர்.

பொலிஸாரைக் கொலை செய்வதற்கு சில மணி நேரங்களிற்கு முன்னதாக தீவிரவாதிகள் 12 பொது மக்களையும் கொலை செய்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 10 தினங்களில் இந்த இயக்கத்தினால் கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 40 ஆக உயர்வடைந்துள்ளது.

1992ஆம் ஆண்டிற்குப் பின்னர் அல்ஜீரியாவில் இடம்பெற்றுவரும் வன்செயல்கள் மூலம் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். (உ-9)

# போருக்கு தயாராகவிருப்பதே அமைதிக்கு உத்தரவாதமளிக்கும்

## பாக். இராணுவத் துணைத் தளபதி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் தேசியக் கொள்கையின் பிரகாரம், காஷ்மீரைப் பிரிக்க முடியாது என்று அந்நாட்டு இராணுவத் துணைத் தளபதி முகமது யாசுப்கான் தெரிவித்துள்ளார்.

லாகூர் கடற்படைப் பயிற்சிக் கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பேசும் போது மேற்கண்டவாறு கூறிய யாசுப்கான் மேலும் தெரிவித்ததாவது,

சர்வசேத நிர்ப்பந்தம் இருந்தாலும் எங்கள் உத்தியை நாங்கள் மாற்றிக்கொள்ள முடியாது. இதில் உறுதியாக உள்ளோம்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் அமைதி முன்முயற்சிகள் வரவேற்கத்தக்கனவென்றாலும் நமது இராணுவம் விழிப்புடன் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

போருக்கு நாம் தயாராக இருக்கின்றோம் என்ற நிலைதான் அமைதிக்கு உத்தரவாதமளிக்கும். அமைதி முயற்சி தோல்வியடைந்தால் நமது இராணுவ பலத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

படையெடுப்பைத் தடுத்துநிறுத்தும் ஆற்றல் பாகிஸ்தானுக்கு இருக்க வேண்டும் என்று யாசுப்கான் தெரிவித்துள்ளார். (உ-2)

WORLD NEWS
உலக தரிசனம்

# நேபாளத்தில் புதிய பிரதமர் தெரிவு

(காட்மண்டு)

நேபாளத்தின் புதிய பிரதமராக தேசிய ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த சூரிய பகதூர் தாபா நியமிக்கப்பட்டுள்ளார்.


இதுவரை இப்பதவியிலிருந்து வந்த லோகேந்திர பகதூர் சான்ட் கடந்த வெள்ளிக்கிழமை தனது பதவியை இராஜினாமாச் செய்து கொண்டதை அடுத்தே நேபாள மன்னர் கஜேந்திரா புதிய பிரதமரை நியமித்துள்ளார்.

முடிந்தவரை அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் உரிய பிரதிநிதித்துவத்தை வழங்கி, புதிய அமைச்சரவையினை அமைக்கத் தமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென மன்னர் கஜேந்திரா புதிய பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, மாவோ்ர் தீவிரவாத இயக்கத்துடன் நேபாள அரசு சமாதானப் பேச்சுக்களை நடத்த முன்வந்துள்ள நிலையில் அங்கு புதிய பிரதமர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

# வாஜ்பாய் நாடு திரும்பிய கையுடன் அத்வானி அமெரிக்கா புறப்பாடு

(புதுடில்லி)



இந்தியத் துணைப்பிரதமர் எல்.கே.அத்வானி அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளிற்கு நாளை உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவிருக்கின்றார்.

இந்த விஜயத்தின்போது, பயங்கரவாதம் குறித்து இருநாட்டுத் தலைவர்களுடனும் கலந்தாலோசனை நடத்தவுள்ளார்.

அதேசமயம், அமெரிக்காவிற்கு முதலில் பயணம் செய்யும் இவர் அந்நாட்டு ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ், இராஜாங்க அமைச்சர் கொலின்பவல், பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ் பீல்ற் மற்றும் தேசிய பாதுகாப்புத் துறை ஆலோசகர் கன்ரலீசாரைஸ் ஆகியோரைச் சந்தித்து தனிப்பட்ட முறையில் பேச்சுக்களையும் நடத்தவுள்ளார்.

இதனையடுத்து, பிரித்தானியாவிற்கு பயணம் செய்யும் எல்.கே.அத்வானி அந்நாட்டுப் பிரதமர் ரொனி பிளேயர் உட்பட ஏனைய தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை, இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தனது 3 நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு புதுடில்லி திரும்பியுள்ள நிலையில் துணைப் பிரதமரின் இந்த விஜயம் அமையவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (உ-2)

# நாடாளுமன்றத் தேர்தலில் வாஜ்பாய் போட்டியிடுவார்

## பாரதீய ஜனதாக் கட்சி அறிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் வேட்பாளராக நிறுத்தப்படுவாரென பாரதீய ஜனதாக் கட்சி அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கும் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் வெங்கையா நாயுடு, வாஜ்பாய் இன்னும் தனது பதவியிலிருந்து ஓய்வு பெறவில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வாஜ்பாயின் கொள்கைகளின் அடிப்படையிலேயே பாரதீய ஜனதாக் கட்சி அடுத்த தேர்தலைச் சந்திக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவராக துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி இருப்பதாகவும் இதனால் இவரது பெயரும் தேர்தல் பிரசாரத்தில் முன்வைக்கப்படுமென வெங்கையா நாயுடு மேலும் தெரிவித்துள்ளார். (உ-2)

# மத்தியகிழக்கு சமாதானத் திட்டம் வெற்றிகரமாக அமுல்படுத்தப்படும்

## இஸ்ரேல் உறுதிமொழி

(ரெல்அவிவ்)

மத்திய கிழக்கு சமாதானத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்துவதற்கான உறுதி மொழியை இஸ்ரேல் அமெரிக்காவுக்கு அளித்துள்ளது.

இதேவேளை, மத்திய கிழக்கில் தமது எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதற்கான பெரியளவிலான அறிகுறி தென்படுவதாக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன், பலஸ்தீனப் பிரதமர் மொகமட் அப்பாஸ் ஆகியோர் யோர்தானில் நேற்று முன்தினம் முதல் தடவையாக நேருக்கு நேர் சந்தித்து கைலாகு கொடுக்கும் போது அமெரிக்க அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினரும் பல முக்கிய பொறுப்புக்களை தம்மிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அவர்கள் திருப்தி அடையும் வகையிலான தீர்வு ஒன்றை எடுக்க சற்று கடுமையாக உழைக்க வேண்டிய நிலை தமக்கு ஏற்பட்டுள்ளதாகவும் புஷ் மேலும் தெரிவித்துள்ளார். (உ-2)



கஜகஸ்தான் நாட்டிலுள்ள பைக்கானுர் ரஷ்ய விண்வெளி ஆய்வு நிலையத்திலிருந்து செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பப்பட்ட ஐரோப்பிய விண்கலம் இது. இதை விண்ணில் ஏந்திச் சென்றது சோயுஸ் ரொக்கெட்.



## வெள்ளி முற்றம்

# வாரிசு

**கலாபூசணம் அராலியூர், ந.சுந்தரம்பிள்ளை.**

வேலுப்பிள்ளை வாத்தியாருக்கு வயது அறுபது. ஆசிரியராக இருந்து ,அதிபராகி இப்பொழுது ஓய்வு பெற்று விட்டார்.சேவையில் இருந்த காலத்தில் உண்மையாகவே சேவை செய்தவர். செல்வம், செல்வாக்காக இருந்தவர். அவரது மனைவி பூமணிக்கு வயது ஐம்பத்தைந்து. உத்தியோகம் பார்க்கவில்லை. வீட்டில் இருந்து குடும்பத்தை மட்டும பார்த்துக் கொண்டிருந்ததால் உடையாமல் இருக்கிறார்.

அவர்களுக்கு, நாலுபிள்ளைகள். மூத்தமகன் முருகதாஸ ஒழுங்காகப் படித்துக் கொண் டிருந்தவன். திடீரென்று கனடா போகிறேன் என்று துவங்கினான். தனது நண்பர்கள் வெளிநாடுகளுக்குப் போவதை பார்க்க, அங்கு போனவர்கள் உழைக்கிறார்கள் என்று கேள்விப்பட, அவனுக்கும் கனடா ஆசை வந்து விட்டது.

வேலுப்பிள்ளையருக்கும்பூமணிக்கும் மூத்தமகனை கனடாவுக்கு அனுப்ப விருப்பமில்லை. அவரோ அதிபர். அவரது மகனும் அவரைப் போலபடித்து உத்தியோகம் பார்க்க வேண்டாமா? அந்த நாட்டுக்குப் போனவர்கள் எல்லாரும் உழைக்கிறார்கள் தான். ஆனால் அந்த உழைப்பு இப்பொழுது குடும்பத்திற்குத்தேவையில்லை.மூத்த மகன் இப்படிப்போனால், மற்றப் பிள்ளைகளுக்கும் அந்த ஆசை வராமல் இருக்குமா? பார்ப்பவர்கள் என்ன சொல்வார்கள்? ‘வாத்தியார் சரியாப் படிப்பிக்கேல்லை. அது தான் மகன் படிப்பை குழப்பீட்டுக் கனடாவுக்கு ஓடீட்டான்என்று சொல்ல மாட்டார்களா?.

பூமணிக்கு பிள்ளைகள் எல்லோரும் தன்னுடன் இருக்க வேண்டும் என்பது தான் விருப்பம். அப்படி இருக்க மூத்த ஆம்பிளைப்பிள்ளையை வெளியே அனுப்புவதா?

பெற்றோர்எவ்வளவோ தடுத்துப் பார்த்தும் முருகதாஸ் ஒரே பிடிவாதமாக நின்றான் போகத்தான் போகிறேன் என்று. சண்டை பிடித்துக் களைத்துப் போய், கடைசியாக அனுப்பி விட்டார்கள்,கடன்பட்டு.

முருகதாஸ் அவர்களை ஏமாற்றவில்லை. கனடா போய்,நன்றாக உழைத்து,வீட்டுக்கும் ஒழுங்காக காசு அனுப்பி,அப்பா பட்ட கடனைத் தீர்த்தான். தங்கை தாரிணியையும் கனடாவுக்கு அழைத்துக் கலியாணம் செய்து வைத்தான்.

தாரிணியை கனடாவுக்கு அனுப்புவதற்கு வேலுப்பிள்ளையரும் பூமணியும் எதிர்ப்புக்காட்டவில்லை; மாறாக சந்தோஷப்பட்டனர். போகும் பொழுது அவளுக்கு வயது இருபதைந்து.ஏ.எல். நாலுபாடம் பாஸ் பண்ணிவிட்டு வீட்டில் சும்மா இருந்தாள். வேலுப்பிள்ளை வாத்தியாரும் மகளுக்கு பல இடங்களிலும் கலியாணம் பேசிப் பேசிக் களைத்து போனார். படிப்பு, அழகு, சீதனம் எல்லாம் இருந்தும் கலியாணம் பெருந்தவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் முழிசிக்கொண்டிருந்த நேரத்தில் தான் முருகதாஸிடமிருந்து கடிதம் வந்தது வரப்பிரசாதமாக. தாரிணியும் போக விருப்பப்பட்டாள். அனுப்பிவிட்டு, ஒரு பொறுப்பு நீங்கியது என்று நிம் மதிப்பெருமூச்சு விட்டனர்!

இப்பொழுது இளைய மகன் வசீகரனும் கனடா போகிறேன் என்று கிளம்புகிறான் .அவன் வெறும் ஆளல்ல. அப்பாவின் ஆசையை நிறை வேற்றப் படித்துப் பல்கலைக்கழகம் சென்று பட்டம்பெற்றவன். வேலை கிடைக்காமல் இரண்டு ஆண்டுகள் காவல் இருந்து அலுத்துப்போய் கனடா போகிறேன் என்று துவங்கியிருக்கிறான்.

வசீகரனை அனுப்ப பெற்றோருக்கு துப்பரவாக விருப்பமில்லை. இவ்வளவு படித்துப்பட்டம் பெற்ற பிள்ளை, அப்பாவின் பெயர் துலங்க, குடும்பத்தின் பெயர் விளங்க உள்நாட்டில் வேலை பார்ப்பதல்லவா சிறப்பு ? இருக்கிற சொத்துப் பத்துக்களை இளைய மகள் சுகன்யாவிற்கு கொடுக்கலாம் தான். வசீகரன் தானே அந்தக் குடும்பத்தின் வாரிசு? ஆம்பிளைப் பிள்ளை போய்விட்டால், குடும்பத்தின் பேர் துலங்காது! இனி உறவு, பற்று பாசம்...

[illegible] மகனுக்கும் இடையில்கொஞ்ச நாட்களாக சரியான வாக்கு வாதம். மகன் போவது அப்பாவைவிட அம்மாவுக்குத் தான் பேரிழப்பு, பெரிய தாக்கம். இருந்தாலும் மகனது ஆசையையும் பரிதாபத்தையும் பார்த்து விட்டு பூமணி மகனுக்கு ஆதரவாகவே பேசினாள்!

‘வசீகரன் !நீபட்டம் எடுததிருக் கிறாய். உனக்கு ஒரு நணைச் ... குக்ப்பாயம் உத்தியோகம் கிடைக்கும். நீ இந்த நாட்டிலை எங்களோட இரு!' என்றார் வேலுப் பிள்ளை.

‘எங்கை அப்பா கிடைக்குது! எனக்குக் காவல் இருந்து காவல் இருந்து அலுத்துப் போச்சு !'

‘கிடைக்கும்,கிடைக்கும்! முந்திப் பாஸ் பண்ணின பிள்ளையளுக் கெல்லாம் அரசாங்கம் வாத்திவேலை குடுத்ததுதானே!'

‘எனக்கு நம்பிக்கை இல்லையப்பா. அப்பிடிக் கிடைச்சாலும் இதென்ன உழைப்பு? கனடா போனா அள்ளை கொள்ளையாய் உழைக்கலாம்!'

‘அப்பிடியான உழைப்பு எங்களுக்குத்தேவையில்லை. எங்களிட்டை இருக்கிற பொருள் பண்டமே எங்களுக்குப்போதும்.நீ இஞ்சை இருந்தா, எங்களுக்கு எவ்வளவு பெருமை!'

‘காசு இருந்தா, எங்கையிருந்தாலும் பெருமைதான் அப்பா!'

‘காசு எல்லாரிட்டும் இருக்கடா தம்பி; படிப்பு எல்லாரிட்டும் இல்லை! அதைப்பயன்படுத்து!'

“‘இஞ்சை ஆமியோடும் இருக்கேலாது; நானும் உலகத்தைப் பாக்கவேணும்!”

“‘கொண்ணன் முருகதாஸ் போகேக்கை தமிழ்ப் பொடியன்களைப் பிடிச்சான்கள். இப்ப என்னடா பயம் ?'

“ இப்பவும் பிடிக்கிறான்கள் தானே அப்பா?”

“‘அவன் பயப்பிடுறான் போகட்டும் விடுங்கோ!” என்றாள் பூமணி.

“‘வசீகரன் இந்தச்சாட்டைச் சொல்லிக்கொண்டு ஓடப்பாக்கிறான் பூமணி, உனக்கு விளங்கேல்லை!”

“ அவன் சொல்லூறதும் சரி இஞ்சையும் பிடிக்கிறாங்கள் தானே?”

“ அது இயக்கத்தொடர்பு உள்ளவங்களை.இவனை ஏன் பிடிக்கிறாங்கள்?” இவன் பல்கலைக் கழகத்தில் படிச்சவன்?”

“‘அப்பா! அவங்கள் சந்தேகம் வந்தா,ஆரையும் பிடிப்பங்கள்”

“‘தம்பி,நாங்கள் பாடு பட்டுப் பெத்து, வளத்தனாங்கள். எங்களோடை இரன்ரா!” என்றாள் பூமணி உருக்கமாக.

“ அம்மா நான் சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லீட்டன். உந்தக் கதை இனி என்னோடை பேசாதேங்கோ!”

“‘தம்பி வசீகரன்,நீ இஞ்சை இருந்து உத்தி யோகம் பாத்தாத் தான்ரா உனக்கும் கௌரவம், எங்களுக்கும் ... கௌர என்றார் வேலுப்பிள்ளை.

“ நீங்கள் தான் பெரிய அதிபராக பெருமையாக இருந்துட்டியளே! இனி அவனையும் அவன்ரை விருப்பப்படி நடக்கவிடுங்கோ!”

“‘அப்பா பெருமையாய் இருந்தாக் காணாது,மகனும் பெருமையாய் இருக்கவேணும்.இனி இவன் போனா எனக்கு வாரிசு இல்லையே பூமணி!”

“ நான் எங்கை இருந்தாத்தான் என்ன? கலியாணம் கட்டிப்பிள்ளைப் பெத்தா உங்களுக்கு வாரிசுகள் வரும் தானோ அப்பா ?” என்று கேட்டுச் சிரித்தான் வசீகரன்.

“ பிள்ளையள் அங்கை இருந்து என்னடா சுகம்? இனி அதுகள் இங்கிலீசு பேசும்.உங்கை வெளி நாடு போனவேன்ரை பிள்ளையள் எல்லாம் அந்தந்த நாட்டு மொழி தான் பேசூதாம்.”

“‘அப்ப உங்களுக்குத்தமிழ் பேசூற பேரப்பிள்ளையள் தான் வேணும்?” என்று சிரித்தான் வசீகரன்.

இவ்வளவும் இந்த உரையாடலை கேட்டுக்கொண்டு உள்ளே இருந்த சுலோசனா, இப்பொழுது அந்த இடத்திற்கு வந்தாள். அவள் பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவி. இளமையாக அழகாக இருந்தாள்.

“‘அப்பா,நானும் உங்களுடைய மகள் தானே?” என்றாள் அப்பாவுக் குக் கிட்டப்போய்.

“‘ஓம்சுலோ,அதுக்கென்ன இப்ப?

“ அப்ப ஏன்,அண்ணை போனா வாரிசு இல்லாமல் போயிடும் என்று சொல்லூறியள்? நான் உங்கடை வாரிசு இல்லையா?” புன்னகையுடன் கேட்டாள்.

“‘ஆம்பிளைப்பிள்ளையைத் தானே பரம்பரைப்பிள்ளை, வாரிசு எண்டு உலகம் சொல்லூது?”

“‘உலகம் கிடக்கட்டும் அப்பா. உங்களுக்குநான் பிள்ளைபோலை இல்லையா? உங்களுக்கு என்னிலை பற்றுப்பாசம் இல்லையா? ”

எல்லாம் இருக்குப்பிள்ளை. எனக்கு ரண்டு பேரிலும் பற்றுப் பாசம் இருக்கு.ஆம்பிளைப்பிள்ளை பெற்றோருக்கு கொள்ளி வைப்பன். கருமாதி செய்வன்...”

“‘ஏனப்பா பொம்பிளைப் பிள்ளை கொள்ளி வைச்சா பிணம் எரியாதா?. பொம்பிள்ளைப்பிள்ளை கருமாதி செய்யக்கூடாதா?”

“‘அதுகளை ஆம்பிளைபபிள்ளை செய்யவேணும் எண்டு தான் ஆகமங்கள் கூறூது பிள்ளை!”

“‘ஆண்கள், பெண்களை அடக்கி வைச்சிருந்த காலத்திலை எழுதப் பட்ட ஆகமங்கள்! ஆணும் பெண்ணும் சரி நிகர் சமானமாக எல்லாத் துறையிலையும் போட்டி போட்டு முன்னேறூற இந்தக் காலத்துக்கு உந்த ஆகமங்கள் பொருந்தாது!”

“‘தங்கச்சி பெண்ணியக்கருத்துக்களைச் சொல்லூறாள்!” என்று சிரித்தான் வசீகரன்.

“ ஏன் அண்ணை இந்தக்கருத்துக்கள் பிழையா? ”

“‘எல்லாம் சரி தங்கச்சி. நான் ஏற்றுக்கொளளூறன் அப்பா ஏற்றுக் கொள்ளவேணுமே!”

“ இந்தக் காலத்திலை எல்லா கிரியைகளையும் பெண்களும் செய்கிறாளவை. சிலருக்கு கிரியைகளே செய்யிறதில்லை.!”

“‘ஆரை அகதியளைச் சொல்லூறியா பிள்ளை?”

“‘இல்லையப்பா சாதாரண ஆக்களுக்கும் தான்.பலருக்குப் பிள்ளை குட்டி எல்லாம் வெளி நாட்டிலை. இஞ்சை திவசம் மாளையம் செய்ய ஆளில்லை. எல்லாக்கிரியைகளும் செத்த வீட்டோடை சரி.”என்று சிரித்தாள் சுலோசனா.

“‘அந்த நிலை எனக்கு வரக் கூடாதெண்டு தான் பிள்ளை, கொண்ணனை மறிக்கிறன்”

எல்லாம் நான் செய்வன். அண்ணைபாவம். அவற்றை எண்ணப்படியே போக விடுங்கோ அப்பா!”

“‘சுலோ,நீ சுதந்திரமாய் இயங்க முடியாது.உனக்கு வரப்போகிற கணவன் அனுமதிச்சாத்தான் நீ எதையும் செய்யலாம்.கொண்ணன் எதையும் தான் நினைச்சபடி செய்யலாம்.அதுதான்எல்லாரும் ஆம்பிளைப்பிள்ளை வேணும் எண்டு விரும்பூறது'

“‘அப்பா நான் படிச்சிருக்கிறன்; உத்தியோகம் பாப்பன்; சுதந்திரமாகவும் இயங்குவன்.”

“‘அதை இப்ப சொல்ல முடியாது பிள்ளை!”

“‘என்னையும் என்ரை மனைவி தடுக்கலாம் தானே அப்பா? எத்தினை பெண்சாதிமார் புருசன்மாரை ஆட்டிப்படைக்கிறாளவை என்று சிரித்தான் வசீகரன்.

“‘பாத்தியளா அப்பா, பெண்சாதிமார்,புருசன்மாரை ஆட்டிப் படைக்கிறாளவை எண்டு அண்ணை சொல்லூறார். நானும் அந்த மாதிரி என்ரை கணவனை ஆட்டிப் படைச்சு , உங்களுக்குச் செய்ய வேண்டிய கடமையள் எல்லாம் செய்யவன்!” என்று சிரித்தாள் சுலோசனா.

“‘சரி,சரிஉந்தக் கதையை விட்டுட்டுப்போய் உங்கடை வேலையளைப் பாருங்கோ”என்று அந்த வாக்குவாத்தை அப்போதைக்கு முடித்துவைத்தார் அப்பா.

வேலுப்பிள்ளை வாத்தியாருக்குச் சின்னத்துரை வாத்தியார் என்று ஒரு நண்பர் இருக்கிறார். அறிவும் அனுபவமும் நிரம்பியவர். ஊரில் உள்ளவர்களுக்கெல்லாம் ஆலோசனைகள் கூறுவார். வசீகரன் அவரைப்போய்ப்பிடித்தான், தனக்கு உதவும் படி. வாத்தியார் வந்தார்.

“‘வேலுப்பிள்ளை ! குடும்ப கௌரவப் பரம்பரை வாரிசு எண்டது ஒண்டிலும் உண்மையுமில்லை; அர்த்தமும் இல்லை. எல்லாம் மனிசனாலை ஏற்படுத்தப் பட்டவை! என்றார்.

“ என்ன சின்னத்துரை அப்பிடிச் செல்லூறாய். எல்லாம் இருக்குத் தானே,” என்றார் வேலுப்பிள்ளை.

குடும்ப கௌரவம், பரம்பரை, வாரிசு எண்டு பேசூறவை எல்லாம் காசுக்காறரும் வசதியாக வாழூறவையும் தானே? சாதாரண மக்களுக்கு அதுகளைப்பற்றி நினைக்கவே நேரம் இல்லை. கூலிக்காறனுக்கு அன்றாடம் சாப்பாட்டுக்கு உழைக்கவே நேரம் சாரி ”

“ அவங்கள் நினைக் காட்ட, இதுகள் எல்லாம் இல்லை எண்டதா கருத்துமாஸ்ரர் ?”

“‘இல்லைத்தான் ! எங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக் கிறது தனித்தனி ஆன்மா. செத்த உடனை ஆன்மா வேறை எங்கையோ போயிடுது. உறவுகள் எல்லாம் இந்த உடம்புக்குத் தான். உடம்பு அழிஞ்ச உடனை எல்லாமே இல்லாமல் போயிடுது !”

“‘மாஸ்ரர் நீங்கள் சைவ சித்தாந்தம் பேசூறியள்”- சிரித்தார்.

“‘அது உள்ளதுதானே வேலுப்பிள்ளை மாஸ்ரர்? குடும்ப கௌரவம், பரம்பரை எண்டு பேசூற தெல்லாம் மனிதனது ஈகோ! மனிதன் தன்னுடைய பெயர் நிலைச்சிருக்க வேணும் எண்டு ஆசைப்படூறான் அது நிலைக்காது. நீ செத்த பிறகு ஆரும் உன்னை பற்றிப்பேச மாட்டினம். பெரிய பெரிய அதிகாரியள், அதிபர்கள் எல்லாம் இருந்தாங்கள் இப்ப அவங்களைப்பற்றி ஆர் பேசூறான்? ஆருக்குத்தெரியும்?”

“‘சிலருடைய பேர் நிலைச்சிருக்கே மாஸ்ரர்?”

“‘அவங்கள் செயற்கரிய செய்த பெரியோர்! ஷேக்ஸ்பியர், கம்பர் திருவள்ளுவர் இந்காலத்திலை பாரதி,கல்கி எங்கடை ஆறுமுக நாவலர்... அவர்களுடைய கருத்துக்களையும் நூல்களையும் நாங்கள் பயன்படுத்துறதாலை,அவர்களைப்பற்றி நினைகிறம். வேலுப்பிள்ளை உன்ரை பேரும் நிலைச்சிருக்கவேணும் எண்டு நீ விரும்பினா,அவங்களைப்போலை எதையாவது செய்!”

“‘நான் அப்பிடி ஒண்டும் செய்யேல்லை; செய்யவும் ஏலாது!”

“ என்னாலும் அப்படி ஒண்டும் செய்யேலாது! என்றான் வசீகரன்”

“‘மனிசன் ஆசைப்பட்டு பொருள் சேர்க்கிறான்.பிறகு அதை தன்ரை பிள்ளையளுக்கே குடுக்கவிரும்பூறான். மற்றவைக்கு கொஞ்சம் கூட குடுக்க விருப்பமில்லை. இது சுத்தமான சுய நலம்! உனக்குத் தான சுலோசனா இருக்கிறாளே! அவளுக்கே எல்லாத்தையும் குடு!”

“‘நானும் அப்பாவின்ரை வாரிசு தானே மாமா,”

“‘ஓம் பிள்ளை அண்ணைக்கு உள்ள அளவு உரிமை உனக்கும் இருக்கு.!”

“ இல்லாட்டிலும் பொம்பிளைப் பிள்ளைக்குத்தானே வீடுவளவைச் சீதனமாக் குடுக்கவேணும்? என்றாள் பூமணி.

“‘வேலுப்பிள்ளை,இல்லாத ஒண்டுக்காக மகனுடைய முன்னேற்றத்தை தடுக்காதை! அவன் விரும்பியதைச் செய்யவிடு!”

“‘வாத்தியார்! என்னைப்பாக்க ஆரும் இல்லையே!”

“‘நான் இருக்கிறனே!” என்று பூமணி சிரித்தாள்”


“‘பூமணி நீ முந்தினா”

“‘நீங்கள் முந்தினா நான் உங்களைப்பாப்பன்;நான் முந்தினா, நீங்கள் என்னைப்பாருங்கோ!”

“‘நானும் இருக்கிறனே!” என்றாள் சுலோசனா.

“‘தம்பி வசீகரன்,நீ விரும்பியதை செய்யடா என்றார் வேலுப்பிள்ளை.

(யாவும் கற்பனை)



# தலைசிறந்து விளங்கும் சைவமதப் பண்பாடுகள் நலிவுறாது பேண நம்மவர் முன்வரவேண்டும்

சைவமதம் என்றைக்கோ தோன்றி இன்றைக்கோ அறிய முடியாத் தொன்மை பெற்றது. ஆதியந்தமில்லாத இம்மதம் அரும் பெரும் சோதியான சிவபரம் பொருளை முழுமுதற் கடவுளாகக் கொண்டது. ஆண்டாண்டு வாழ்ந்த ஞானிகளாலும், சைவமதழைக்க மெய்யுருகிய சமய, சந்தான குரவர்களாலும் வளர்க்கப்பட்டு வந்தது. ஈழமண்டிற்கு நாட்டிலே ஆறுமுகநாவலர், சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார், விபுலானந்த அடிகளார், சேர்பொன் இராமநாதன், சு.இராசரெத்தினம் என்போரால் எம்மதம் வளர்த்தெடுக்கப்பட்டு வந்தது.

ஈழத்திருநாட்டிலே உரித்தான வரலாற்றுமதம் சைவமேயாகும். இயக்கர், நாகர் வழிபட்ட கோவில்கள் ஈழத்திலே மிளிர்கின்றதை உதாரணமாகக் கலாம். இங்குவந்த வெள்ளையரால் எம்மீழம் நிலைமாறிக் கொண்டிருக்கின்ற வேளையிலே, எம்மதமானது நலிவுற்றது. முன்பு எந்நிலையில் இந்துமதம் இருந்ததோ அந்நிலைக்குக் கொண்டுவரப் பாடுபட்டவர்களே மேற்குறித்த சைவப்பெரியார்கள். அவர்கள் பணியாலேயே சைவ சமயப்பணி இன்றும் நிலைத்திருக்கின்றது என்றால் மிகையில்லை.

ஆனால், இன்று நிலைமை மாறுகிறது. எம்முடைய மதப்பண்பாட்டில் ஒழுகுபவர்களை ஈழத்திரு நாட்டில் விரல்விட்டெண்ணலாம். ஏன் அந்நிலைக்கு விரைகின்றோம் என்ற நிலையறிந்து செயற்படுவார்கள் ஒருவருமில்லை. மதம்பற்றிப் போசுபவர்கள், பிரசங்கிப்பவர்கள், மார்பு தட்டிக் கொள்வதில் என்ன அர்த்த மிருக்கின்றது? அவர்கள் புகழ் வெறுத்து செயற்பட்டார்களாயின் எம்மதம் பாழ்படும்வேகம் குறைக்கப்படும் என்பது உண்மை.

ஒவ்வொரு பிரஜையும் தன் மதத்தை உணரவேண்டும். அது அவனுடைய கடமையும் வாழ்வின் வெற்றிவழியுமாகும். இன்றைய கால கட்டத்திலே எமது சமயப் பண்பாட்டை கெடுப்பதற்கு அடித்தளமிடுபவர்கள் பெற்றோர்கள் என்று கூறினால் குற்றமன்று நான் எண்ணவில்லை. இன்றைய சிறார்கள்தான் நாளைய ஈழத்தின் சிற்பிகள். அவர்கள் நல்ல வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டிய நேரத்தில், பெற்றோர் தம்பிள்ளைகட்கு அன்னியமோகத்தை வளர்த்து மதப்பண்பாட்டை சீர்குலைக்கின்றார்கள். சமூக அந்தஸ்து என்கின்ற மூடக் கொள்கைதான் அவர்களை பாதித்திருக்கவேண்டும்.

### திருநீறு அணிதல்

பாடசாலை மாணவனை எடுத்துக் கொண்டால் அவன் கடைபிடிக்கும் வழிமுறைகள் இன்று பாதுராமானதாகவே காணப்படுகின்றன. 'நீறில்லா நெற்றி பாழ்' என்றாலள் ஔவைப் பாட்டி. சைவக் குடும்பத்திலே பிறந்த ஒருவன் சமய தீட்சைபெற்ற பின்னரே உண்மையான சைவசமயி ஆகிறான். ஆனால் இன்றைய மாணவர் சமூகத்



தில் சமய தீட்சை பெற்றவர்கள் சொற்பமாகவே காணப்படுகின்றார். விபூதி, உருத்திராக்கம் என்னும் சிவசின்னங் களில் விபூதியானது முக்கியமானது. புனிதத்தை உணர்த்துவது சாணம் என்ற அழுக்குள்ள தியால்அழிக்கப்பட்ட தெய்வத் தன்மை பொருந்திய சாம்பர் ஆகும். மெஞ்ஞானத்தை மறந்த மனிதனுக்கு அது விளங்கவில்லை. விபூதிஅணியும் மாணவர்கள்எம்சமூகப் பாடசாலைகளில் குறைந்து செல்கின்றார்கள். அணிபவர்களும், திரிபுண்டரமாககோ உத்தூளமாகவோவன்றி முறைதவறி அணிகின்றனர்.

### நவநாகரீகம்

இன்றையநாளில் விபூதிஅணியும் பண்புழிய வைக்கப்படுகின்றது. ஏன் மதப்பண்பாடு அழிக்கப்படுகினறது? என்று கேட்டால் நாகரீகமென்று கூறுகிறார்கள். நாகரீகம் என்றால் என்ன என்பதை புரிந்துகொள்ளவில்லை. எம்முடைய பண்பாட்டை புதுமை மண்ணைப்பதான் நாகரீகமே அன்றி எம மண்ணை சூறண்டிக் கொச்சைப்படுத்தியவர்களின் போக்கைப் பின்பற்றுவதல்ல நாகரீகம். புரிந்தும் புரியாத ஆசைகளால் தாமும் கெட்டு, சமூகத்தையும் கெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய நாகரீகத்தில் ஒன்றாய் உதித்ததுதான் விபூதி அணிவது குறைவடைவதன் காரணமாகும். பாடசாலை மாணவருள் விபூதி அணிபவர்கள் அணியாதவர்களால் கொச்சைப்படுத்தப்படுவதும் அதிகரித்து வருவது நோக்கறபாலது.

### சமயக்கல்வி

இன்று நம்மக்களிடையேயும் மாணவரிடையேயும் மறைந்துசெல்வது சமயக்கல்வி. முதியவர்கட்கு, கற்காதவர்க்குச் சமயக்கல்வியினை போதிக்கவே புராணபடனமுறை நாவலர் பெருமானால் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இன்று அதுபோன்ற முறைகள் காணப்படாதது குறையாகும். காணப்பட்டாலும் தவறிழைப்பது பெரும் குறைபாடாகும். சமயக் கல்வி பாடசாலைகளில் போதிக்கப் படுகின்றது. ஆயினும் சமயக்கல்வியின் மகத்துவத்தை நாம் உணர்வதில்லை. நாட்டில் நல்ல பிரஜையாக வாழவே சமயக்கல்விப் பாடத் திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் சைவப்பிள்ளைகள் அதை உணர்வதில்லை. பரீட்சை எழுதுவதற்கும் சித்தியடைவதற்கும்தான் சமயக்கல்வி என எண்ணுகின்றார்கள். சபையிலே ஒரு சைவ் பிள்ளையை தேவாரம்படி என்று கூறினால் அவன் பின்நிற்கும்போதே எமது மதம் பின் நிற்பது புரியவில்லையா?

ஆண், பெண் என்ற இருபாலாரையும் உள்ளடக்கியதுதான் சமூகம். அதிலேயும் ஆன்றோரால் ஆக்கி வைத்த நல்ல கொள்கைகளை கொண்டது நமது சமூகம். ஆனால் ஒவ்வொருவரும் இதை உணராமல் எம்மதத்தை மட்டுமல்லாது எம்சமுதாயத்தையுமே கெடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். உலகில் உதித்ததில் இருந்து உதிரும்வரை கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள் பல எமது மதத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றன. இன்று அவை பின்பற்றப்படுகின்றனவா? மெல்ல மெல்ல அழிகின்றன.

### ஆலய வழிபாடு

ஆண்ஒருவன் ஆலயத்திற்கு செல்லும்போது வேட்டியுடன் செல்வதே முறை. ஆனால் அவர்கள் அப்படி மாறுவது மந்தகதியில் இருந்தாலும், பெண்கள் ஆடைமுறை சந்ததியில் லாமல் அழிகின்றது. ஒவ்வொரு பெண்ணும் தாம் ஆலயத்திற்கு செலலும்போது எவ்வாறு செல்ல வேண்டும் என்று தங்களைத் தாங்களே கேட்டுப்பார்க்க வேண்டும். ஆலயத்தை பெண்கள் கருதும்முறை மோசமடைந்து செல்கின்றது. அவர்கள் ஆலயத்துள் பிரவேசிக்கும்போது ஆலயம் என்ன அந்தப்புரமோ என்று தோன்றுகின்றது?

'பசித்தோர் முகம்பார்' என்றும் 'உண்ணும்போது ஒரு கைப்பிடி அளித்துண்' என்றும் 'அன்பேசிவம்' என்றும் எம்மதத்தின் ஆத்மநூல்கள் பலவாறாக எடுத்தியம்புகின்றன. ஆனால் எம்மண்ணில் நாம் அவ்

**வெள்ளி நற்சிந்தனை**

வாறு செய்கின்றோமா? இல்லவே இல்லை. எத்தனை ஏழை எளியவாகள் ஊனின்றி, உடையின்றி, உறங்க இடமின்றி, வெய்யிலிலும் மழையிலும் விலங்குகள்போல் அல்லோல கல்லோலப்படுகிறார்கள். ஆலயங்களின் சூழலில் இருந்து அழுது இறைஞ்சுகின்றார்கள். ஆனால் ஒரு சல்லிக்காசும் இடார்கள் இக்காலமக்கள். அவர்கள் ஆலய வழிபாட்டின் பயனையே இழந்துவிடுகின்றார்கள்.

இவ்வாறாக அற்ப காரணங்களாலும் சுயநலத்தாலும், நடைமுறைச் சாத்தியமற்ற விடயங்களில் மக்கள் இறங்கியதாலும் எம்மதம், எம்மதப் பண்பாடுகள் அழிந்துகொண்டு செல்கின்றன. மதம்என்றால் என்ன? எம்மதத்தின் வழிஎன்ன? புகழ்என்ன? என்பதை புரிந்துகொள்ள வேண்டும். மதத்தைக் கடைப்பிடிக்காத நாஸ்திகர்களால்தான் நாடு நலிவடைவது மறைமுகமான உண்மை. எம்மதம் தலைசிறந்த மதம். அதை சொல்லிப் புரிய வைக்கமுடியாது.

எனவே இதனை அனைவரும் உணரவேண்டும். அதிதுரிதமாக செயற்படவேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகட்கு அந்நியமோகத்தை வளர்க்கக்கூடாது. சமயக் கருத்துக்களையும், கதைகளையும் சிறுவயதிலி ருந்தே பிள்ளைகட்கு பதியும்ப்டி கூறவேண்டும். ஆண் பெண் இரு பாலாரும் திருவிழாக் களிலும், கலா சார நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளும்போது பாரம்பரிய உடையை அணிதல் அவசியம். அதன்மூலம் மறை யும் மதத்திற்கு புத்துயிர் அழிக்க வேண்டும்.

**ப.குணேந்திரன்**

---

## இடம்பெயர்ந்தோர் பிரதமருக்கு மகஜர்

(தென்மராட்சி)

வலிகாமம் வடக்கில் இருந்து 1990 ஆம்ஆண்டில் வெளியேற்றப் பட்டு யாழ். மாவட்டத்தில் தற்போது 48 இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் வலி வடக்கு மக்கள் நேற்று முன்தினம், யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனிடம் பிரதமருக்கு முகவரி இடப்பட்ட 48 மகஜர்களை கையளித்துள்ளனர்.

48 இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களைச் சேர்ந்த தலைவர்களாலும்கையளிக்கப்பட்ட இம் மகஜர்களின் பிரதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசிய தலைவர் மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ,யு என்.எச்.சி.ஆர், நோர்வே தூதுவர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இம்மகஜர்களை பெற்றுக் கொண்ட அரச அதிபர், தான் இவற்றினை பிரதமர் அலுவலகத்திற்கு உடன் அனுப்பி வைப்பதாக உறுதியளித்தார். (த-77,4)

## தென்னிலங்கையைப் புனரமைக்க 278 கோடி தேவை

(கொழும்பு)

தென்னிலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புனரமைப்பதற்கு 278 கோடிரூபா தேவைப்பமென அனர்த்த முகாமைத்துவ குழுவின் தலைவா் அமைச்சா் கருஜெய சூரிய தெரிவித்துள்ளார்.

செவ்வாயன்று இலங்கையிலுள்ள வெளிநாடுகளின் தூதுவர்களுக்கும், உதவிவழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் சேதவிபரங்கள் குறித்து விளக்குகையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அமைச்சர், இவற்றில் பெரும்பாலான நிதி வடுகளின் புனரமைப்புக்கு செலவிடப படுமெனவும் தெரிவித்துள்ளார்.(தி)

## சங்கீத சபையின் அறிமுறைத் தேர்வு

(யாழ்ப்பாணம)

வட இலங்கைச் சங்கீதசபையினால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படும் அறிமுறைத் தேர்வு எதிர்வரும் 7,8ஆம் திகதிகளில் நடைபெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ந-5)

---

முதலமைச்சர்கள் நியமன விவகாரம்

## சர்ச்சைகள் குறித்து சட்டமாஅதிபர் ஆலோசனை

(கொழும்பு)

மாகாணசபைகள் சிலவற்றின் முதலமைச்சர் பதவிகள்குறித்து எழுந்துள்ள சர்ச்சைகள் தொடர்பாக சட்டமாஅதிபரின் ஆலோசனையை உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் அலிக் அலுவிகார கோரியுள்ளார்.

இதுகுறித்து ஏற்கனவே சட்டமா அதிபர் திணைக்களத்துடன் அமைச்சர் கலந்துரையாடியுள்ளார்.

இந்நிலையில், சட்டமாஅதிபரின் ஆலோசனைக்கமையவே மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் பதவிகள் தொடர்பாக தீர்மானிக்கப் படவுள்ளன.

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாத ஒருவர் எந்தவொரு மாகாண சபையிலும் முதலமைச்சராக பதவியில் இருக்கமுடியாதென உயர் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்புவழங்கியதை அடுத்து தற்போது முதலமைச்சராக பதவிவகிக்கும் சிலரது பதவிகள் கேள்விக்குறியாகியுள்ளன.

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாமல் ஊவாமாகாணசபை முதலமைச்சராக சமரவீர வீரவன்னி நியமிக்கப்பட்டது சட்டத்துக்கு முரணானது என்ற நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து மேல்மாகாண வடமத்திய மாகாண முதலமைச்சர்களின் பதவிகள் சர்ச்சைக்குரியனவாகியுள்ளன.

இம்மாகாணசபைகளின் முதலமைச்சர்கள் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாமல் முதலமைச்சர்களாக இருந்துவருவது அம்பலத்துக்கு வந்துள்ளது. (தி)

## வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த விசேட குழுவொன்று அமைப்பு

(கொழும்பு)

வீதிவிபத்துக்களை குறைப்பதற்கான வழிவகைகளை பரிந்துரை செய்வதற்கு குழுவொன்று நியமிககப் பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கியமுன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் விடுத்த கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அமைச்சர் ஜோன் அமரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அமைசசர், இக்குழுவின் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவுள்ளன என தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களாக அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கட்டுப் படுத்தும் நோக்கில் பிரதமரின் பணிப்பின் பேரில் விசேடபொலிஸ் பிரிவொன்று அமைக்கப்பட்டதும் தெரிந்ததே. (தி)

---

பாராளுமன்றத்தில் மலர்வளையம்

## சபையின் பாதுகாப்பற்ற நிலையை உணர்த்துகிறது

அமைச்சர் மகிந்தசமரசிங்க

(கொழும்பு)

செவ்வாயன்று எதிர்க்கட்சி உறுப்பினர்களால் பாராளுமன்றத்தில் மலாவளையம் கொண்டுவரப்பட்ட செயல பாராளுமன்றத்தின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதையே உணர்த்தியுள்ளதாக அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான மகிந்தசமர சிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை செய்திநிறுவனம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்துளளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பிரதான நுழைவாயிலில் வைத்து சோதனையிடப்பட்டபின்னரே பாராளுமனறத்துக்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் அனுமதியின்றி சபைக்குள் மலர்வளையம் எவ்வாறு கொண்டுவரப்பட்டது என்பது கேள்விககுறியாகவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் பாராளுமன்றப் பாதுகாப்புத்தடைகளைத் தாண்டிக் கைக்குண்டொன்று வீசப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தின் பாதுகாப்பு நடவடிககைகள் குறித்து தீவிர கவனம் செலுத்தப்படவேண்டும்.

பாராளுமன்றத்தின் பாதுகாப்பு உடட சகல நடவடிக்கைகளும் தற்போது சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவின் கீழ இருப்பதாகவும் அவர் அங்கு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மலர்வளைங்களை பாராளுமன்றத்துக்குள் எடுத்துச சென்றமை தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்என சபைகள் நேற்று முன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (தி)

ஐரோப்பிய யூனியன்

## 3.27 மில்லியன் நிதி உதவி

(கொழும்பு)

நீண்டகால யுத்தத்திற்கு முடிவு கட்டும் நோக்குடன் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளுக்கு உதவும்வகையில் ஐரோப்பிய யூனியன் 3.27மில்லியன் யூரோவை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இந்நிதி போர்நிறுத்தக் கணகாணிப்பு நடவடிக்கைகளுக்கும், மின்சார விநியோக புனரமைப்பு மற்றும் சமாதானச் செயலகத்தின் செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அங்கத்தவர்கள் எண்ணிக்கையை அதிகரித்து அதன் பணியை விஸ்தரிக்கவும், யாழ். கண்டி வீதி, விளக்குவைத்த குளம், புளியங்குளம் ஆகிய இடங்களிலுள்ள சோதனைச்சாவடிகளிற்கு மின்சார வசதிகளை ஏற்படுத்தி அப்பாதையால் 24மணி நேரமும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், சமாதானப் பேச்சுக்களின் இடைநிறுத்தக் காலத்தின்போது யுத்த நிறுத்த உடன்படிக்கையினை முறையாகப் பேணுவதற்தும் இந்நிதி பயன்படுத்தபபடவுள்ளது.

இந்நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டு அதன பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. (தி)

## சமாதான நடவடிக்கை

# நோர்வே மத்தியஸ்தம் குறித்த நம்பிக்கை தென்பகுதியில் வீழ்ச்சி

## கருத்துக்கணிப்புக்கள் தெளிவுபடுத்துகின்றன

(கொழும்பு)

**சமாதான நடவடிக்கைகளில் மத்தியஸ்தராக தற்போது செயற்பட்டுவரும் நோர்வே அரசு மீதான நம்பிக்கை தென்பகுதி மக்களிடையே படிப்படியாக குறைந்து வருகிறது என்றும்,**

**தொடர்ந்தும் நோர்வே அரசாங்கம் அனுசரணையாளராக செயற்படுவதற்குத் தென்பகுதி மக்கள் வழங்கிவரும் ஆதரவு மிகவும் வீழ்ச்சியடைந்து வருவதாகவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நடத்திய கருத்துக் கணிப்பில் இருந்து தெரியவந்துள்ளது.**

மேற்படி கணிப்பின்மூலம் மேலும சில விடயங்கள் வெளிச்சமாகியுள்ளன.

போர் நிறுத்தக் கண்காணிப்புக்களில் ஈடுபட்டுவரும் ஸ்கண்டிநேவிய குழுவினரின் பணிகளுக்கும் தென்பகுதியில் எதிர்ப்பலை கிளம்பியுள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தம் மேலும் வலுப்படுத்த வேண்டும் என்பதே இவர்கள் எதிர்பார்ப்பாகும்.

கடந்த வருடம் மேற்படி நிலையத்தினரால் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின்போது 46.3 சதவீதமானோர் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவரும் நோர்வே அரசின் அனுசரணையினை விரும்பி ஏற்றிருந்தனர்.

அதேபோன்றதொரு கருத்துக் கணிப்பை இவ்வாண்டுத் தொடக்கத்தில் நடத்திய சமயம், 42.3 சதவீதமாக நோர்வேயின் அனுசரணைக்கு வழங்கிவரும் மக்களின் ஆதரவு குறைவடைந்திருந்தது.

இவை தவிர, விட்டுக்கொடுப்பது, இணங்கிப்போவது தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்ற நிலையிலும் இலங்கையின் உள்நாட்டுப் போரிற்கு என்ன காரணம் என்பதில் பெரும்பான்மையினராகிய சிங்கள மக்கள் மற்றும் தமிழ் மக்களின் சிந்தனையோட்டத்தில் மிகப்பெரிய இடைவெளி இருக்கின்றது என்பதை மக்கள் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளனர்.

தமிழர்கள் மீது பாகுபாடு காட்டப்பட்டதுதான் இனப்பிரச்சினைக்கு காரணம் என 60 சதவீதமான தமிழ் மக்கள் கருதுகின்றார்கள். அதேபோன்று 15 சதவீதமான சிங்கள மக்களும் ''இனப்பிரச்சினைக்கு தமிழர்கள் மீதான பாகுபாடே காரணம்'' என நம்புகிறார்கள் என்பதும் இந்தக் கருத்துக் கணிப்பில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்கள் இது விடயதில் வேறோர் வகையில் கருத்து தெரிவித்துள்ளனர்.

சமாதானப் பேச்சுவாத்தையில் தாம் தனித்தரப்பாகப் பங்குற்ற வேணடும் என வாக்களித்தவர்களில் 80 சதவீதமானவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சமஷ்டி அமைப்பிலான தீர்வு பற்றியும், அத்தகைய தீர்வொன்றை இலங்கையில் நடைமுறைப்படுத்தும் போது என்னென்ன நடக்கும் என்பது பற்றியும் மக்கள் இன்னும் தெளிவில்லாமல் இருக்கிறார்கள் என்பதும் இக்கருத்துக் கணிபபில் இருந்து தெரியவந்துள்ளது.

66 சதவீதமான மக்கள் சமஷ்டி பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்பதை இக்கருத்துக் கணிப்பின் ஊடாக தெளிவுபடுத்தியுள்ளனர்.

மேலும், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதில் இலங்கை அரசும் - தமிழீழ விடுதலைப் புலிகளும் உணமையான ஈடுபாடு காட்டுகிறார்கள் என்பதில் நம்பிக்கை வைத்திருந்த மக்களின் எண்ணிக்கையும் கடந்த ஆறுமாத காலமாக வீழ்ச்சியடைந்து வருகிறது என்பதையும் இக்கருத்துக் கணிப்பு மேலும் தெளிவு படுத்தியுள்ளது.

இவ்வாறானதோர் கருத்துக் கணிப்பை சோஷல் இண்டிக்கேற்கட் நிறுவனமும் அண்மையில் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(உ-10)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டுபடும் நிலை சிரேஷ்ட, கனிஷ்ட உறுப்பினர்கள் இழுபறி

(கொழும்பு)

தனக்கெதிராக அவதூறு பரப்பியதாக குற்றஞ்சாட்டி ஸ்ரீலங்கா சுதநதிரக் கட்சியின் ஒரு பிரிவினரால் நடத்தப்படும் லக்மின பத்திரிகையிடமிருந்து ஆயிரம் மில்லியன் ரூபா நட்டஈடு செலுத்துமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கோரிக்கை விடுத்துள்ளார்.

கிரிமினல் அவதூறுச் சட்டம் அகற்றப்பட்டுள்ள போதிலும், சிவில் சட்டத்தின் கீழ் இவ் நட்டஈட்டைக் கோருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களைக் குற்றம்சாட்டி வரும் கட்சியின் பத்திரிகை ஒன்றுக்கெதிராக எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தவறிழைத்தவர்கள் கட்சியில புதிதாகச் சேர்ந்தவர்களே. அவர்கள் ஆரம்பத்தில் எனக்கெதிராக சேறடிப்பு பிரசாரத்தை மேற்கொண்டு வந்தனர். இப்போது அதனை ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கு செய்கிறார்கள். ஜெயராஜ் கட்சிக்கு விசுவாசமுள்ளவர். அவர்மீது எமக்கு நமபிக்கையுள்ளது. கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்களை அவமதிப்புச் செய்யும் பிரசாரத்தை நிறுத்துவதற்கு கட்சியின் தலைமைப்பீடம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பல்வேறு விவகாரங்களில் முரண்பாடான கருத்துகள் இன்னும் இருந்து வருவதால் ஸ்ரீலங்கா சு.கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்படுவது மேலும் தாமதமாவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திடீர் பொதுத் தேர்தல் ஒன்று வருமாயின் எந்தெந்தத் தொகுதிகளில் யார் யார் போட்டியிட வேண்டும என்பது பற்றிய விபரங்கள், புதிய கூட்டணியின் பெயர், சின்னம் போனறவற்றில் இன்னும் உடன்பாடு ஏற்படவில்லை. பொதுச் செயலாளர் பதவி பற்றியும் இன்னும் முடிவு எதுவும எடுக்கப்படவில்லை. இவை பற்றிய முடிவுகள் இம்மாதக் கடைசியிலேயே எடுக்கப்படலாம் என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ)

# புலிகள் ஆயுதத்தைக் கைவிட்டால் இடைக்கால சபை வழங்கலாம்!

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபை கையளிக்கப்படுவதாயின், விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போடுவதுடன், ஈழக்கோரிக்கையையும் கைவிட வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இடைக்கால நிர்வாக சபை விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டால், அது தனி நாட்டுக்கு வழி வகுத்துவிடும் எனவும், இதனை ஜனாதிபதி எச்சந்தர்ப்பத்திலும் அனுமதிக்கக் கூடாது எனவும் கோரி புத்தபிக்குகள் செவ்வாயன்று ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

புத்த பிக்குகளின் கோரிக்கைகள அடங்கிய இந்த மகஜரைப் பெற்றுக் கொண்ட ஜனாதிபதி, அவர்கள் முன்னிலையில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு தனிநாட்டுக் கோரிக்கையையும் கைவிட்டால் இடைக்கால நிர்வாகத்தை அவர்களிடம் கையளிப்பதில் எந்தவித சிக்கல்களும் இல்லை. ஆனால், இடைக்கால நிர்வாகத்தில் விடுதலைப் புலிகள் மாத்திரமன்றி தமிழ், முஸ்லிம் சிங்கள சமூகங்களைச் சேர்ந்தவர்களும் இடம்பெறவேண்டும். இவ்வாறு அனைத்து சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிப்பிரதிநிதிகளை இந்த இடைக்கால நிர்வாகத்தில இணைத்துக் கொள்வதற்கு எந்தவிதமான தடைகளும் இல்லை.

அவ்வாறு இல்லாமல் விடுதலைப் புலிகளிடம் மாத்திரம் இடைக்கால நிர்வாகம் ஒப்படைக்கபபடுமாயின் அதனைத் தாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

(த)

# யுத்தத்தால் சீரழிந்த வடகிழக்கை சீரமைப்பது அரசாங்கத்தின் கடமை

## டோக்கியோ புறப்படுமுன் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் கடந்த 20வருடகால யுத்தத்தால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது என அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ளும் முகமாக, நேற்று முன் தினம் ஜப்பான் புறப்படுவதற்கு முன்னர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்த பீரிஸ் மேலும் கூறுகையில்,

கடந்தகால யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு முற்றாக சிதைந்துள்ளது. இதனைப் புனரமைக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

இம்மாதம் 9,10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டில் சுமார் 3பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைக்கும். இந் நிதியின் மூலம் நாட்டை சுபீட்சப் பாதைக்கு இட்டுச் செல்ல முடியும்.

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் நீர்ப்பாசனத்துறை, வீதிகள் என்பன புனரமைக்கப்படவேண்டும் என்பதுடன, கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். இதுதான் இன்றைய அத்தியாவசிய தேவையாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வல்லமை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமே உண்டென சர்வதேச சமூகம் நம்புகின்றது.

டோக்கியோ மாநாட்டின் மூலம் கிடைக்கும் நிதி எந்தக் காரணகளின் அடிப்படையிலும் குறைவடைய மாட்டாது எனத் தெரிவித்துள்ளார்.

(தி)


யாழ்ப்பாண மாநகரசபை

**உள்ளூராட்சி வாரம் - 05 மைல் ஓட்டப்போட்டி**

உள்ளூராட்சி வாரக் கொண்டாட்டத்தை முன்னிட்டு மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வதிவோர் மாத்திரம் பங்குபற்றும் 05 மைல் ஓட்டப் போட்டியை யாழ்.மாநகரசபை எதிர்வரும் 13.07.2003ஆம் திகதி நடாத்தவுள்ளது.

இப்போட்டி தொடர்பான நிபந்தனைகள், விண்ணப்பப்படிவங்கள் மற்றும் மேலதிக விபரங்களை உள்ளூராட்சி வாரக் கொண்டாட்டத்தினையொட்டி நல்லூர் மாநகரசபை வளவினுள் இயங்கும் விசேட அலுவலகத்தில் ரூபா 50/=ஐ செலுத்தி எதிர்வரும் 25.06.2003ஆம் திகதி பி.ப.3.00 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

இ. இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

[C/6262]


## அனைத்துப் பல்கலை மாணவர் ஒன்றியம் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடந்த திங்கள் முதல் ஒருவார கால எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நிதி குறைக்கப்பட்டுள்ளமை உட்பட பல கோரிக்கைகளை அடிப்படையாக முன்வைத்தே இவ் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(தி)


குடும்ப/பொது உளவளத்துணையாளருக்கான

**பயிற்சி நெறி**

1. மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. பயிற்சிக் காலம் :- ஒரு வருடம்.
   பயிற்சி நாட்கள் :- சனி, ஞாயிறு காலை மு.ப.9.00 - பி.ப.2.00மணி வரை
3. கல்வித்தகைமை :- க.பொ.த. உயர்தரம் சித்தி, சமூகசேவை, உளவியலில் நாட்டம்.
4. பயிற்சிக் கட்டணம் :- 4000/-

சுய விபரமடங்கிய விண்ணப்பப்படிவத்தை 15.06.2003இற்கு முன்,

இயக்குநர்,
''அகவொளி''
குடும்பவளத்துணை நிலையம்,
சென். பற்றிக்ஸ்றோட்,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு நேரில் அல்லது அஞ்சலில் அனுப்பி வைக்கவும்.

[6998]

இயக்குநர்.

# இடம்பெயர்ந்த வலி வடக்கு மக்கள்

# அரசாங்க அதிபரிடம் முறைப்பாடு

## தமது நிலையை நேரில் வந்து பார்க்கவும் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி வடக்குப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து மீளக் குடியேற முடியாது நலன்புரி நிலையங்களிலும் அகதிமுகாம்களிலும் அவல வாழ்வைத் தொடரும் மக்கள் தம்நிலை தொடர்பாக யாழ். அரச அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் அரச அதிபர் எஸ்.பத்மநாதனை அவரது அலுவலகத்தில் சந்தித்த வலி.வடக்கு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இது குறித்து விளக்கமாக எடுத்துரைத்தனர்.

கடந்த 15 வருடங்களாக இடம்பெயர்ந்து அகதி வாழ்வை அகதி முகாம்களிலும் நலன்புரி நிலையங்களிலும் தொடர்கின்றோம்.

அங்கும் கூரைகள் சிதைந்த வீடுகளிலும் குடிநீர் வசதி, மலசல கூடவசதிகள் அற்ற நிலையில் எந்நேரமும் சரிந்து விழக்கூடிய குடியிருப்புக்களில் அடிப்படை வசதிகள் இல்லாது வாழ்ந்து வருகிறோம்.

இந்நிலையில் கிராம சேவகர்கள் பிரதேச செயலாளர்கள் ஆகியோர் எமக்குரிய கொடுப்பனவுகளை வழங்குவதில் இழுத்தடிப்புக்கள், புறக்கணிப்புக்களை மேற்கொள்கின்றனர்.

இவ்வாறான நிகழ்வுகள் கோப்பாய், தெல்லிப்பழை பிரதேசங்களில் அதிகமாக நிகழ்கின்றன.

அத்துடன் எமக்கு பல உதவிகளை வழங்குவதாக கூறும் நிறுவனங்கள் வாக்குறுதியை மட்டும் தந்துவிட்டு அவற்றை நிறைவேற்றாது விடுகின்றன.

சில நிறுவனங்கள் முகாம்களை பார்வையிட வருவதாக பெரிதாக விளம்பரப்படுத்துவதுடன் நின்றுவிடுகின்றன.

இந்நிலைமைகள் தொடர்பாக கூடிய கவனம் எடுக்க வேண்டும். எம் நிலையை நீங்கள் நேரில் வந்து பார்வையிடவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-4)

### இந்தியாவில் இடம்பெயர்ந்திருந்த

# ஈழ அகதிகள் 32 பேர்

# புதனன்று நாடு திரும்பினர்

(நெடுந்தீவு)

கடந்த கால யுத்தநிலை காரணமாக இடம்பெயர்ந்து இந்திய அகதிமுகாம்களில் வசித்து வந்தோரில் 26 குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர் தாயகம் திரும்பியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு இராமேஸ்வரத்திலிருந்து புறப்பட்டு நேற்றுக் காலை 7 மணிக்கு நெடுந்தீவு மேற்கு பனங்காணிக் கடற்கரையில் வந்திறங்கிய இவர்களில் 13 பெண்களும், 3 குழந்தைகளும் அடங்குகின்றனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

இவர்களுக்குரிய உடனடி உணவுத் தேவைகளை நெடுந்தீவுப் பொலிஸாரும், கடற்படையினரும் இணைந்து வழங்கியுள்ளனர்.

நெடுந்தீவுப் பொலிஸார் இவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டபின் நெடுந்தீவுப் பிரதேச செயலர் பொறுப்பேற்று சென் அன்ரனீஸ் பாலர் பாடசாலையில் தங்க வைத்துள்ளனர். இவர்களுக்கான உணவு வசதிகளை நெடுந்தீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அனுசரணையுடன் நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் செய்து வருகின்றது. (உ-126)

# மதுபோதையில் திரிவோர்

# கைது செய்யப்படுவர்

## யாழ். பொலிஸார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் நள்ளிரவு வேளைகளில் மது போதையில் வீதிகளில் நிற்பவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுவருகின்றனர்.

அண்மைக்காலமாக யாழ். நகரப் பகுதிகளில் மது போதையில் செல்வோர் வீதியால் செல்பவர்களைத் தாக்கிவருகின்றனர். இதனைத் தடுக்கும் நோக்கிலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இரவு 11 மணிக்குப் பின்னர் மதுபோதையில் பொது இடங்கள் வீதிகளில் நிற்பவர்களை பொலிஸார் கைது செய்து வருகின்றனர்.

இந்நடவடிக்கை ஏனைய இடங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர். (ந-7)


## தரம் 10 மாணவர்களுக்கான

# கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டிப் பரிசில்கள்.

1ஆம் பரிசு ரூபா 750/=
2ஆம் பரிசு ரூபா 500/=
3ஆம் பரிசு ரூபா 250/=

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மூத்த எழுத்தாளர்

**அமரர் கே. டானியல்** ஞாபகார்த்தமாக

கட்டுரையின் தலைப்பு

**தொலைக்காட்சியும்மாணவர்களும்**

போட்டியின் விதிகள்:

தரம் பத்தில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* கட்டுரை 200தொடக்கம் 225சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப்பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.06.2003ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15,வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**

**கட்டுரைப்போட்டி இல-5**

மாணவர் பெயர்: ..............................

பாடசாலை முகவரி: ..............................

..............................

கற்கும் தரம்: ..............................

உறுதிப்படுத்துகிறேன்

..............................

ஆசிரியர்.


# சமாதான நீதவானாக நியமனம்



யாழ்ப்பாணம் கில்னர் கல்லூரி வீதி வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகராஜா ஜெகதீஸ்வர ராஜா (ஜெகதீஸ்) சென்ற மாதம் யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் பி.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவனும், கல்லூரியின் பழைய மாணவர் சங்க உப செயலாளரும், யாழ். செஞ்சிலுவைச் சங்க நல்லூர் பிரிவின் உறுப்பினரும், மாவை விட்டரி விளையாட்டுக் கழக செயலாளரும், மாவை கிராம முன்னேற்றச் சங்க உறுப்பினரும், மாவை சிக்கன கடன் வழங்கும் சங்கத்தின் உறுப்பினரும், சிறந்த விளையாட்டு வீரனும், சிறந்த சமூக சேவையாளரும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினருமாவார்.

# கரையோர வீதிகளை புனரமைக்க

## 10 மில்லியன் நிதி ஒதுக்கு

(யாழ்ப்பாணம்)

2003 ஆம் ஆண்டின் வேலைத் திட்டத்தின் கீழ் குடாநாட்டின் கரையோர வீதிகளை புனரமைக்க புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் மீள் குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சு 10 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளது.

போரினால் இடம்பெயர்ந்து சென்று மீண்டும் யாழ். குடாநாட்டில் மீளக் குடியமர்ந்துவருகின்ற மக்களின் பாவனைக்காக கரையோரப் பிரதேசத்தில் உள்ள 28 வீதிகளை உடன் புனரமைப்பதற்காகவே இந்நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் உடன் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்புனரமைப்பு நிதி யாழ். அரச அதிபர் ஊடாக வழங்கப்படவுள்ளது. (உ-7)

# பல்கலைக்கழக மாணவர்களிடம் மக்கள் மனந் திறந்து கூறியவை

''செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்ப தேன்வந்து பாயுது காதினிலே...''

என்பது வெறும் கவிதைக்காகவல்ல. பாரதி தன் ஆத்மதிருப்திக்காக பாடினான் என்பதை மக்கள் மத்தியில் பொங்கு தமிழ் பற்றி உரையாடச் சென்ற போது உணர்ந்து கொண்டோம். இடம்பெயர்ந்து வாழும் மக்களிடம் பொங்கு தமிழ் பற்றி கருத்தறிய முற்றபட்ட போது உணர முடிந்தவை...

''தம்பி நான் சாகிறத்துக்கிடையில ஊருக்குப் போகலாமேடா'' என்று கேட்டது ஒருவர் இருவர் அல்ல. பாட்டி, தாத்தாக்களிடம் இருந்த ஒரேயொரு கேள்வி இது தான்.

''மயிலிட்டியில போய் ஒருக்கா அந்தக் கடற்கரையிலை கிடந்திட்டு வாறளவுக்காவது ஏதாவது வழி செய்வாங்களோடா'' என்று கேட்டார் ஒரு பழுத்த கிழவரான தாத்தா.

இவ்வாறெல்லாம் ஊர் போக வேண்டும் என்ற கனவுகளோடு வாழும் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்வு எப்போது மாறும். ஆசைகள் எப்போது பூர்த்தியாகும்? அந்த மக்கள் தம் ஊரின் அந்தநாள் நினைவுகளை எம்மோடு பகிர்ந்து கொண்டனர்.

''எங்கடை ஊரிலை இருந்த நேரத்திலை நாங்கள் எவ்வளவு சந்தோசமாய் இருந்தம். அந்தக் காலத்தில ஊரிலை உள்ள சின்னஞ்சிறிசுகள் எல்லாம் தொழிலுக்குப் போங்கள். நல்ல வருமானம். பள்ளிக்கூடத்தால வந்து புத்தகத்தைப் போட்டுட்டு சாப்பிட்டு கடற்கரைக்கு போனால் 50, 100, 150, 200 எண்டு காசோடை தான் வருங்கள். ஒரே உழைப்பு. வேலையில்லாத நேரத்தில் கடற்கரையில விளையாடுங்கள். எங்களுக்கும் பொழுது போகாட்டி காட்ஸ் அல்லது தாயம் ஏதாவது விளையாடுவம''

இப்படி இவர்களின் ஊரில் இனிமையான நாட்களை நினைவு கூர்ந்தபோது ''தம்பி இண்டைக்கு எங்கட சின்னப்பெடியள் படிப்பும் ஒழுங்கில்லை. பொழுதுபோக்கு சரியில்லை. படம் படமெண்டு அலையுதுகள். என்ன செய்யிறது. அது ஊரிலை இருந்தால் பிள்ளையள் தானாப் படிக்குங்கள். தொழில் செய்யுங்கள'' என்று இன்று தம் வாழ்வை எமக்கு எடுத்துக் காட்டினார் ஒருவர்.

அவலம் நிறைந்த அகதி முகாம் வாழ்வு, வாழும் குடியிருப்பு வாழ்வு பற்றிக் குறிப்பிடும் போது ''முகாமில இருக்கிற எல்லாக் குடும்பமும் சில பொதுவான கஷ்டங்களை அனுபவிக்குதுகள். அது தண்ணிப் பிரச்சினை மற்றது மலசல கூடப் பிரச்சினை. அதுகள் தான்...''

சிறிது நேரம் யோசித்த பின் ஒரு பெருமூச்சோடு தொடர்ந்தார். ''முகாமில சில சனம் ஓரளவு வசதியாய் இருக்குதுகள். அது கொஞ்சம் நாகரிகமாய் வாழவேண்டும் எண்டு மோட்டச் சைக்கிள், ரீ.வி எண்டு கொஞ்சம் ஆடம்பரமாய் இருக்குதுகள். அது பிழையில்லை. ஆனால் மற்றக் குடும்பங்களுக்கு இது மனத் தாக்கத்தை குடுக்குது. சிறிசுகள் சரியாய் மனம் பேதலிக்குதுகள'' என்ற அவரிடம் ''வசதியானாக்கள் வேறை எங்கேயாவது போயிருக்கலாம் தானே'' என்று கேட்ட போது ''வாடகை வீட்டில இருக்கிறதை விட இது பறவாயில்லை'' என்றார் விரக்தியாய் சிரித்தபடி.

மேலும், நாம் உரையாடிய போது அவர், எவராலும் ஜீரணிக்க முடியாத ஆபத்து நிறைந்ததுமான தம் அகதி வாழ்வின் படு பயங்கரமான வாழ்நிலையை எம்முன் எடுத்துக் கூறினார். ''சின்னவீட்டுக்கை இருக்கேக்கை ஒவ்வொரு நாளும் எங்கடை இளம் பிள்ளையள் கன கஷ்டங்களை அனுபவிக்குதுகள். அதுகளுக்கு அது பெரிய மனக்கஷ்டமான விஷயம் தம்பி உங்களுக்கு விளங்கும் தானே. உந்தப் பொதுக் கிணறு. அதுவும் குழாய்க்கிணறு. அதிலை குளிக்கிறது, உடுப்பு மாத்திறது'' என்று சொல்லிக் கொண்டே போனார்.

அதனை விட நெருக்கமான குடியிருப்புக்களில் வசித்து வருவதால் பாலியல் ரீதியிலும் பல பிரச்சினைகளை அவர் தனது மொழியில் எங்களுக்குக் கூறினார். அது மிகவும் ஆபத்தான நிலைக்கு எதிர்கால சந்ததியை இட்டுச் செல்வதை நாம் உணர்ந்து கொள்கின்றோம்.

அப்போது ஒருவர் அங்கே விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களை காட்டி, ''தம்பி இஞ்ச இருக்கிற நேசறிக்கு ஒரு அடிப்படை வசதியும் இல்லை. ஊர்ப்பிள்ளை ஒருத்தி தான் படிப்பிக்கிறாள். சம்பளம் கனகாலம் குடுக்கேல. அதவிட அங்கால எல்லாம் வடிவாச் சோடிச்சு விளையாட்டு சமானுகள் வச்சு வடிவா நேசறி நடக்குது. எங்கடை முகாமில இப்படி இருக்கு'' என்று கவலையுடன் கூறினார்.

எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பது அவசியம். முழுமையான தீர்வு வேண்டுமானால் உண்மையில் அகதி வாழ்வு இல்லாமல் செய்யப்படவேண்டும். அப்படியானால் இராணுவம் எங்கட வீட்டில இருந்து வெளியேற வேண்டும். ''நாங்கள் எங்கட வீட்டை போறத்துக்காக இம்மாத இறுதியில் நடைபெற உள்ள பொங்கு தமிழுக்கு அணி திரள்வோம்''

நல்லாண்மை என்பது ஒருவற்குத்
தான் பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்
– குறள்

## வலம்புரி

### மாணவர் எழுச்சி

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் இன்று தமிழர் தாயகம் எங்கும் மிக உணர்ச்சிபூர்வமாக நடைபெறுகிறது. ஒருநாட்டின் மாபெரும் சக்தியாக விளங்குகின்ற மாணவர்களின் வலிமையால் எத்தனையோ ஆட்சி பீடங்கள் ஆட்டம் கண்ட துண்டு. மாணவர்கள் ஒன்று திரண்டு ஒருமித்து கோஷம் எழுப்பினால் அதற்கு ஈடுகொடுப்பது யாராலுமே முடியாத காரியம். அவ்வகையில் இன்று இடம் பெறும் தமிழீழ மாணவர்களின் எழுச்சி தமிழ் மக்களின் உரிமைக்காக-சுதந்திரத்துக்காக பரிணமிக்க வேண்டும்.

இருபது வருட யுத்தத்தால் தமிழ் மாணவர்களின் கல்வி அழிக்கப்பட்டது, பாடசாலைகள் படைமுகாம்களாயின. எஞ்சியவை யுத்தவிமானங்களின் குண்டுவீச்சுக்களிற்கு இரையாகிப் போயின. இடம் பெயர்வுகளால் மாணவர்கள் தங்கள் உடைமைகளையே இழந்து ஏக்க விழிகளோடு வீதிகளில் அலைந்தனர்.

உலகின் எந்தநாட்டிலும் நடைபெறாத கல்விச் சீரழிப்பு இலங்கையில் இனவாத ஆட்சியாளர்களின் கைங்கரியமாக தமிழ் தாயகத்தில் நடந்தேறியது. இத்தகைய மிலேச்சத்தனமான செயற்பாடுகளால் கல்வியின் விளைநிலம் எனப் போற்றப்பட்ட யாழ்ப்பாணம் கல்வித்தரத்தில் வீழ்ச்சி கண்டது. மாணவர்களின் செயலூக்கமும், சிந்தன்ன ஆக்கமும் பாதைமாறின. இத்தகைய பாதைமாற்றம், கல்விச் செல்வத்தை இழக்கச்செய்தது. அது மட்டுமன்றி, படிக்கவேண்டிய மாணவச் சிறார்கள் வேலைக்கு செல்ல நேர்ந்தது. கற்றலுக்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்ட போதும் யுத்தமென்ற அரக்கனின் கொடையான வறுமையின் மேலெழுகையும் சிறுவர்களைக் கூலி வேலைக்கு இழுத்துச் சென்றது.

பாடசாலையில் மகிழ்வாகப் படிக்கவேண்டிய சின்னஞ்சிறுசுகள் தேநீர்க் கடைகளிலும் பழுதுபார்க்கும் நிலையங்களிலும், வயதுக்கப்பாற்பட்ட சுமைகளைத் தாங்கியவாறு- முறையிடமுடியாத துன்பப் பாரத்தை இதயங்களில் தாங்கிநிற்பதைக் காணும் போதே நெஞ்சம் வெடித்துவிடும்.

கற்பது மாணவர்களின் அடிப்படையுரிமை. இதைத்தமிழீழ மாணவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். சுதந்திரமாக கற்க வேண்டுமாயின் அதற்கான சூழ்நிலை அமைவது அவசியம். ஆனால் கடந்த இருபது வருட காலமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் கற்பதற்குரிய சூழ்நிலை சாதகமாக இல்லை. இத்தகைய பாதக நிலையை மாற்றியமைக்க இன்று நடைபெறும் மாணவர் எழுச்சி வகை செய்யவேண்டும்.

தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பட்ட பிரச்சினைகளைச் சர்வதேச சமூகம் உணரத்தக்க வகையில் தமிழ் மாணவர்கள் ஒருமித்து குரலெழுப்பவேண்டும் இதுவே மாணவர் உரிமையை பாதுகாக்கும் நடவடிக்கையாகும்.

## சர்வதேச ராஜதந்திரிகளால்

# இடைக்காலநிர்வாக சபையை புலிகளிடம் வழங்கலாம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது

## பல்கலையில் இளம்பரிதி உரை

(தென்மராட்சி)

நிதி நெருக்கடியிலும் அரசியல் நெருக்கடியிலும் இருக்கும் அரசுக்கு டோக்கியோவில் நடைபெற விருக்கும் மாநாட்டுக்கு நாம் செல்வதன் மூலம் துணைநிற்கக் கூடாது என்பதாலேயே நாம் அந்த மாநாட்டைப் புறக்கணித்துள்ளோம்.

ஸ்ரீலங்கா அரசு ஒரு இடைக்கால நிர்வாகத்தை அமைப்பது சட்டப் பிரச்சினைக்குரிய விடயம் அல்ல. தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால அரசினை வழங்கலாம் என உலக ராஜதந்திரிகள் கூட ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நேற்றைய தினம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற உலக சூழல் தினம் தொடர்பான ஆய்வுப் பட்டறையில் உரைநிகழ்த்தும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இவ் ஆய்வுப் பட்டறையில் தமிழீழ தேசியக் கொடியினை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைத்தார்.

அழிக்கப்பட்ட இயற்கை வளங்களை ஈடுசெய்வதற்கான திட்டமிடல்'' எனும் தொனிப் பொருளிலான இவ் ஆய்வுப்பட்டறை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடை பெற்றது.

யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் வரவேற்புரையையும், நோக்கவுரையையும் வழங்கினார்.

அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி அங்கு தொடர்ந்து பேசுகையில்,

நாம் எமது பிரதேசத்தில் சூழலைப் பாதுகாத்தும் அரசியல் வழிமுறைகளைப் பாதுகாத்தும் செயல்படுவதன் மூலம் இன்றைய நிலைப்பாட்டை மேம்படுத்த முடியும். எங்களுடைய பிரதேசத்தின் சூழலைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை நாம் எல்லோரும் இணைந்து எடுக்க வேண்டும்.

எமது இனத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாம் ஸ்ரீலங்கா அரசுடன் ஆறு சுற்றுப் பேச்சு வார்த்தையை நடாத்தியிருந்தபோதிலும் கூட, அப்பேச்சு வார்த்தைகளில் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களை அரசு அமுல் செய்யவில்லை. குறிப்பாக ''சிறான்'' அமைப்புக்கு ஒதுக்கப்படும் என வாக்குறுதி தந்த 70மில். அமெரிக்க டொலர் நிதி இன்னமும் கூட வந்து சேரவில்லை. இந்த நிலையில் தான் இன்றைய பேச்சுவார்த்தை நிலை உள்ளது.

நாம் எமது பிரதேசத்தின் சூழலைப் பாதுகாப்பதன் மூலம் தான் எமது தாயகத்தினை அபிவிருத்தி செய்ய முடியும். சூழலை மேம்படுத்துவதில் எமது தேசியத் தலைவர் இறுக்கமான கொள்கைகளையும், நடைமுறைகளையும் கொண்டுள்ளார். வன்னிப் பிரதேசத்தில் மரங்களைத்தறிப்பதில் இறுக்கமான சட்டம் உள்ளது.

இராணுவ நடவடிக்கைக் குட்பட்ட பிரதேசத்தில் வாழ்கின்ற எமக்கு கடந்த 20வருடங்களாக இடம்பெற்ற யுத்ததின் போது சூழல் மிகுந்த பாதுகாப்பினை வழங்கியிருந்தது என்பதை மறந்துவிடமுடியாது. எமது பிரதேசம்பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டது. மரங்களின் பெறுமதியை நாம் அறிந்து கொள்ளவில்லை. வன்னிப்பிரதேசத்தில் முதிரை மரம் ஒன்றினைத்தறித்து வீழ்த்தியமைக்காக ஒருமுக்கிய போராளியை எமது தலைவர் இயக்கதில் இருந்தே விலக்கிவைத்தார்.

எமது பிரதேசத்தில் அழிக்கப்பட்ட மரங்களை ஈடுசெய்ய நாம் வருடந்தோறும் 6லட்சம் மரங்களை நடுகை செய்யவேண்டும். ஆனால் சென்ற ஆண்டில் 50ஆயிரம் மரங்கள் மட்டுமே நடுகை செய்யப்பட்டுள்ளன. இன்று அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் மரங்கள் கண்டபடி படையினரால் வெட்டப்பட்டுவருகின்றன.

மேலும் எமதுபிரதேசத்தில் பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்றவற்றின் பாவனை மிகவும் அதிகரித்துள்ளன. பலநாடுகளில் பொலித்தீன பாவனை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனையும் நாம் குறைக்க வேண்டும கடந்த 20 வருட காலத்தில்18லட்சம் தென்னை மரங்களும் 35 லட்சம் பனைமரங்களும், 6லட்சம் பழ மரங்களும் வெட்டப்பட்டுள்ளன. ஆயினும் அவற்றுக்குச் சமநிலையில் மரம் நடுகை செய்யப்படவில்லை எனக் குறிப்பிட்டார்.

ஆயவுப் பட்டறைக்குத் தலைமை வகித்த யாழ்.பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தமது உரையில்,

எங்களுடைய புவிக் கோளில் மட்டும்தான் மனிதர்கள் வாழ்கின்றார்கள் ஏனைய கோள்களில் உயிரினங்கள் வாழ்வதில்லை எனவே, மனிதர்கள் வாழ்கின்ற புவிக்கோளை நாம் பாதுகாப்பாக பேணல் வேண்டும்.

6ஆயிரம் மில்லியன் மக்கள் வாழுகின்ற இவ்வுலகில் சனத் தொகை மேலும் அதிகரித்துக் கொண்டு போகின்றது. ஆனால் வளங்களோ குறைந்து கொண்டு போகின்றன. எமது நீர்வளத்தில் 97 வீதம் உவர் நீராக இருக்கின்றது. மீதி 3 வீதத்தை மட்டுமே நாம் அருந்தக் கூடியதாக உள்ளது. மக்கள் வாழக்கூடிய பிரதேசமும் சொற்பமாகி வருகிறது.

நாம் எமது சூழல், சுற்றாடல் பற்றி சர்வதேச ரீதியாக அரசியல் மாகாண எல்லைகளைக் கடந்து, சிந்திக்க வேணடியுள்ளது. சர்வதேச உறவு மூலம் இதைச் சாதிக் மூடியும். சுற்றுச் சூழல் பாதுகாப்பு விடயத்தில் நாம் உலகத் தாருடன்இணைந்து செயற்பட வேண்டும். அதன் மூலம் தான் இதனை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக் கூடும் எனக் குறிப்பிட்டார்.

யாழ்.பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் மோகனதாஸ் அங்கு குறிப்பிடும் போது எமது பிரதேசத்தில் லட்சக்கணக்கான பனை, தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. ஆயினும், மீள்நடுகை செய்ததோ மிகக்குறைவானதாகும். நாம் இதனை ஈடுசெய்ய மீள் நடுகைத் திட்டத்தினை முன்னெடுக்கவேண்டும்.

பிரதேச செயலகரீதியில் இதற்கான முனைப்புகள் எடுக்கப்படவேண்டும். இதற்கும் அரசும் வேறு நிறுவனங்களும் திட்டமிடல் வேண்டும். இலங்கையில் 100லட்சம் பனைகள் மட்டுமே இருக்கின்றன. தமிழ் நாட்டில் 400லட்சம் பனை இருக்கின்றன. ஆனால், உலகில் 14கோடி பனைகள் இருக்கின்றன. இத்தொகையில் மூன்றில் ஒரு பகுதிதான் தமிழர் வாழ்கின்ற பிரதேசங்களில் உள்ளன எனக் கூறினார். (உ-77,4,7)

## கொடியேற்றம்

(தம்பசிட்டி)

நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய மகோற்சவம் நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 13ஆம் திகதி தேர்உற்சவமும் மறு நாள் தீர்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

இவ்மகோற்சவத்தின் போது 7ஆம் திருவிழா வரை மாலை 6.30 மணிக்கு தமிழருவி சிவகுமாரனின் தெய்வீகப் பேருரையும் இடம் பெறவுள்ளது. (ந-45)

## தென்மாகாண அமைச்சர் கொலை 3 சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

தென்மாகாண சபையின் மீன்பிடி நீர்ப்பாசன விவசாயத்துறை அமைச்சர் எம்.கே. ரஞ்சித் படுகொலைச் சூத்திரதாரிகளில் 3பேர் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர். தென்மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜி . டபிள்யூ பிஜதாஸ சிங்க தெரிவித்துள்ளார்.

இப்படுகொலை தொடர்பான விசாரனைகளை மேற்கொண்டு வரும் கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான குழுவினரே இம் மூவரையும் கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து கொலை சம்பந்தமான மேலதிக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இத்தகவல்களின் அடிப்படையிலேயே மேலதிக நடவடிக்கைகள் தொடரப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவர்களை கைதுசெய்யும் நடவடிக்கைகளில் அரசியல் தலையீடுகள் எதுவும் இருக்கவில்லை. இப்படுகொலை விசாரணைகளை மேற்கொள்ளவென பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதிலியனகேயின் நேரடிப் பார்வையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது எனவும் மேலும் குறிப்பிட்டார். (த)

## திசரி தியானம்

### உங்களால் முடியுமா?

உண்மையான பாதையில் நடைபோடும் முதிர்ந்த பண்பாளர்களுடன் நட்புக்கொள்ளுங்கள். உள்மனதில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை எப்போதும் மறக்காமல் குறித்துக் கொள்ளுங்கள். சில்லறைத் தனங்களை விட்டுவிடுங்கள். உயர் பண்பு, மற்றும் பெருந்தன்மையானராகத் திகழுங்கள். உயர்பண்பு சிறப்பானது. பெருந்தன்மை உண்மையானது. பிறர் உங்களைக் கேலி செய்தால், மறுத்துச் சொல்லாமல் அவர்களை மன்னியுங்கள்.

சுவாமி சிவானந்தர்

## இலங்கை ம.உ.ஆ. குழுவின் புதிய தலைவராக ராதிகா நியமனம்

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் புதிய தலைவராக கலாநிதி ராதிக குமாரசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசியல் அமைப்பு சபையின் சிபார்சின் பிரகாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் அண்மையில் இந்நியமனம் வழங்கப்பட்டது.

மேலும், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களாக கலாநிதி என்.தீபிகா உடகம, திருமதி சி.சி.சேனநாயக்க, கொழும்பு பலகலைக்கழக சட்டத் துறை முதுநிலை விரிவுரையாளர் என்.சிவகுமாரன், கலாநிதி எம்.ஏ.செயனூதீன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-10)

## அமைச்சர்கள் இருவர் அம்பாறை விஜயம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் குறைநிறைகளைக் கண்டறிய கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அடுத்த மாதமளவில் அம்பாறை மாவட்டத்துக்கு செல்லவுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மாயிலின் அழைப்பை ஏற்றே அமைச்சர் அங்கு செல்லவுள்ளார்.

இதேவேளை, மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த விஜயசேகரவும் இம்மாதம் 25 ஆம் திகதி மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவ்விஜயத்தின் போது அவர் கல்முனைப் பிராந்தியத்துக்கான மீன்பிடித்துறை தலைமை அலுவலகத்தை திறந்து வைப்பதுடன், பலஅபிவிருத்தித் திட்டங்களையும் ஆரம்பிக்கவுள்ளார். (தி)

### லண்டன் நீதிமன்றத்தில்

## இலங்கைப் பெண் உட்பட மூவருக்கு 26வருட சிறைத்தண்டனை

(கொழும்பு)

தாய்லாந்துப் பெண்களை லண்டனிலுள்ள விலைமாதர் விடுதிகளில அடிமைகள் போல் நடத்தி பணம் சேகரித்து வந்த இலங்கைப்பெண் ஒருவருக்கும், உடந்தையாகச் செயற்பட்ட தாய்லாந்துப் பெண்கள் இருவருக்கும் லண்டன் நீதிமன்றம் ஒன்று 26வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

இம்மூவரும் பிரிட்டிஷில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுத் தருவதாகக் கூறி தாய்லாந்துப் பெண்களுக்கு 6ஆயிரம் பவுன்களை வழங்கி பின்னர் அவர்களின் ஊதியத்தில் இருந்து 22ஆயிரம் பவுன்களைப் பெற்றுக் கொள்ளும் வரை அடிமைகளாக வைத்திருந்தனர்.

மேற்படி சம்பவங்கள் பற்றி லண்டன் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களை அடுத்து, கடந்த 8 மாதங்களாக நடத்திய விசாரணைகளினதும், 19இடங்களில் நடத்திய தேடுதல்களின் அடிப்படையிலும் இவர்கள் மூவருக்கும் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. (தி)

# ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்
## நேற்றும் விசாரணை நடந்தது

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் தமிழ் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான இரண்டாம் நாள் விசாரணை நேற்று யாழ் செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த விசாரணையில் மானிப்பாயில் ஊடவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மானிப்பாய் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி சாட்சியமளித்தார்.

இதேவேளை நெல்லியடியில் யாழ் ஊடகவியலாளர் சங்கத் தலைவரும் வலம்புரிச் செய்தியாளருமான வே. தவச்செல்வன் பொலிசாரால் தாக்கப்பட்டமை தொடர்பான விசாரணையும் இடம்பெற்றது.

இவ்விசாரணையில் செய்தியாளர் தவச்செல்வன் வாக்குமூலம் அளித்தார். தமிழ் ஊடகவியலாளர்களை பொலிசாரும் இராணுவத்தினரும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றனர் இதனால் ஊடகவியலாளர்களை அவர்களிடம் இருந்து பாதுகாப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை மேற்படி விசாரணை நீண்ட காலத்திற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருப்பது ஒரு கண்துடைப்பு வேலையே எனவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

இன்றைய தினம் நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி விசாரணையில் சாட்சியம் அளிக்கவுள்ளார்.

இவ்விசாரணைகளின் முடிவில் விசாரணைக்குழுத் தலைவர் ஓய்வு பெற்ற நீதிபதி ஒலிவர் வீரசேனாவை யாழ் மாவட்ட கண்காணிப்புக் குழுத் தலைவர் ஒலேபிரண்டம் சந்தித்துப் பேசவுள்ளார். (த-43)

# தேசிய கல்வியற் கல்லூரி
## பட்டமளிப்பு விழா கொழும்பில்

(வவுனியா)

தேசிய கல்வியற் கல்லூரிகளின் கல்வி பயின்ற ஆசிரிய மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா கொழும்பு மகரகம தேசிய இளைஞர் சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இப்பட்டமளிப்பு விழாவிற்கு அழைப்பிதழ் கிடைக்காத ஆசிரிய மாணவர்கள் பின்வரும் திகதிகளில் மகரகம தேசிய இளைஞர் சேவை நிலையத்திற்குச் சென்று தமது பட்டங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

1995-1997 கல்வியாண்டு மாணவர்களுக்கு எதிர்வரும் 9ம் திகதியும் 1994-1996, 1996-1998 கல்வியாண்டு மாணவர்களுக்கு 10ம் திகதியும் 1997-1998 மாணவர்களுக்கு 11ம் திகதியும் 1998-2000 மாணவர்களுக்கு 12ம் திகதியும் பட்டமளிப்பு நடைபெறவுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சில ஆசிரிய மாணவர்களுக்கு இப்பட்டமளிப்பு விழாவிற்கான அழைப்பிதழ் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. -(இ-5)

# அமைச்சர் ஹக்கீம் டோக்கியோ பயணம

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஆரம்பமாகவுள்ள இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் மாநாட்டில்

தொடர்பாகவும் அதில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவதில் தங்களது நிலைப்பாடு என்ன என்பது குறித்தும் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். அதற்குப் பதிலளித்துப்

## ஈழ அகதிகள்
## 20 பேர் நாடு திரும்பினர்

(மன்னார்)

தமிழகத்தில் உள்ள அகதி முகாமில் இருந்து சுமார் 20 ஈழத் தமிழ் அகதிகள் நேற்றுமுன்தினம் இரவு மன்னாரிற்கு வந்துசேர்ந்துள்ளனர்.

6குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆண்களும் 6பெண்களும் 6 சிறுவர்களுமே இவ்வாறு மன்னாரிற்கு வந்து சேர்ந்துள்ளனர். (வ)

## இளைஞன் படுகாயம்

(தும்பசிட்டி)

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கரவெட்டி கோவில் சந்தைப்பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் கரவெட்டி தில்லையம்பலம் பகுதியைச்சேர்ந்த கனகசபை பிரதீபன் (வயது 19) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-5-45)

## பயிற்சி நிறைவு

(கிளிநொச்சி)

மனிதநேய கண்ணிவெடி அகற்றும பிரிவில் பயிற்சி பெற்ற 39பேர் கொண்ட புதிய அணியினர் நேற்றுப் பயிற்சியை நிறைவு செய்துகொண்டு வெளியேறியுள்ளனர்.

இவ்வணியினருக்கான சான்றுதல் வழங்கும் வைபவம் நேற்றுப் பரந்தனில் நடைபெற்றது.

இவ்வணியினர் பூநகரிப்பகுதியில விரைவில் கண்ணிவெடி, பொறிவெடி

## தமிழீழ மாணவர்...

ஆரம்பமாகி,கஸ்தூரியார் வீதியூடாக யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தைச் சென்றடையும்.

தீவகத்தின் எழுச்சிப் பேரணி வேலணை மத்திய கல்லூரியைச் சென்றடையும்.

இம மாணவர்கள் எழுச்சிப் பேரணிகள் நிறைவடையும் இடங்களில் மாலை நிகழ்வுகளாக விஷேட உரைகள் இடம் பெறுவதுடன்,மாணவர் எழுச்சி நாளையொட்டி மாணவரிடையே நடாத்தப்பட்ட கட்டுரை ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களும்,சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பின்னர் மாணவர்களின் இயல்பான கற்றல் நடவடிக்கைகளை வலியுறுத்தியும் பாடசாலைகளிலிருந்து படையினரை வெளியேறக் கோரியும் மககளின் இயல்பு வாழ்ககையை வலியுறுத்தியும் பிரகடனம் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இதேவேளை,உரும்பிராயில் பொன் சிவகுமாரனின் சிலை அமைந்திருக்கும் இடத்தை நோக்கி அருகிலுள்ள பாடசாலை மாணவர்களது ஊர்வலம சென்றடைந்து அங்கு விஷேட கூட்டம் இடம் பெறவுள்ளது.

பின்னர் அங்கிருந்து உரும்பிராய் கோப்பாய் வீதியிலுள்ள மேஜர் முரளியின் சிலை வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு மு.ப.10.30 மணியளவில் சென்று அகவணக்கமும் மலரஞ்சலியும் செலுத்தப்படும்.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் முதல் மாவீரன் தியாகி பொன். சிவகுமாரன் மற்றும் விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் முன்னாள் பொறுப்பாளர் மேஜர் முரளி ஆகியோரின் நினைவாக அனுஷ்டிக்கப்படும் இத் தமிழீழ மாணவர் எழுச்சி நாள் வடக்கு கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் மிகவும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.இந் நிகழ்வில் அனைத்து மக்களையும் உணர்வு பூர்வமாகக் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் எழிலன்பன் கேட்டுள்ளார். (உ-51,7,4)

## அமைச்சர்...

சென்றுள்ளனர்.

இதேவேளை மேலும் சில அமைச்சர்களும் மற்றும் பல அதிகாரிகளும் இன்றும் நாளையும் டோக்கியோ பயணமாக உள்ளனர் அமைச்சர் மிலிந்த மொறகொட இன்று டோக்கியோ பயணமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## இடைக்கால...

இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பாக இருதரப்பினருக்கும் இடையே எழுந்துள்ள கருத்து முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ள முடியும். கடிதங்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வொன்றை எட்ட முடியாது எனினும் பல்வேறு துறைகளினதும் அபிவிருத்தி தொடர்பாக தற்போதைய நிலைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு பல்வேறு அம்சங்களுடன் கூடிய திட்டங்களை அமுல்படுத்த புதிய கட்டமைப்பொன்று அவசியம் உருவாக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகம் என்பன சமாதானம் தொடர்பாக மிகவும் உறுதிப்பாடாக இருப்பதினாலும் மீண்டும் ஒரு யுத்தம் தேவையில்லை என்றும் மக்கள் வலியுறுத்தியிருப்பதினாலும் மீண்டும் யுத்தம் நடைபெறக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை.இதனை அனைத்து மக்களும் உணர்ந்துள்ளனர்.

டோக்கியோ மாநாட்டில் முடிவுகளை மையமாக வைத்து விடுதலைப் புலிகளுடன் கடிதப் பரிமாற்றம் இன்றி நேரடியாகப் பேசி இடைக்கால நிர்வாக சபை தொடர்பான முரண்பாடுகளைப் போக்கி சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பிரதமர் ராய்ட்டருக்கும் பி.பி.ஸிக்கும் அளித்த பேட்டியைத் தொடர்ந்து நேற்றிரவு யப்பான் பயணமானார். (ம)

## யாழ்.நகைக்...

இதனையடுத்து கடையின் உரிமையாளர் மற்றும் ஊழியர்கள் யாழ்.பொலிசாருக்கு தகவல் வழங்கினர்.

பொலிசார் சம்பவ இடத்திற்கு வந்து,சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அதனை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.இதேவேளை கடந்த முதலாம் திகதியும் மர்மமான முறையில் நகைக் கடையில் தொழில் புரியும் சபாரட்ணம் விஜியகுமார் என்ற இளைஞன் மரணம் அடைந்திருந்தார்.

நகைக் கடை பஜாரில் அடுத்தடுத்து இடம் பெற்ற மர்ம மரணத்தினால் அப்பகுதிக் கடை உரிமையாளர்கள்,ஊழியர்கள் மத்தியில் பெரும் அச்சமும் பதற்றமும் நிலைவி வருகிறது. (இ-7,4,43)

# அமைச்சர் ஹக்கீம் டோக்கியோ பயணம்

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஆரம்பமாகவுள்ள இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து ஜப்பானிற்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

விமானத்தில் புறப்படுவதற்கு முன்பதாக டோக்கியோ மாநாடு தொடர்பாகவும் அதில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவதில் தங்களது நிலைப்பாடு என்ன என்பது குறித்தும் செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். அதற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் விடுதலைப் புலிகள டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்வது சமாதான முயற்சிக்கு உந்து சக்தியாக இருக்குமெனவும் அதில் விடுதலைப் புலிகளை பங்குபற்ற வைப்பதற்கு தீவிர முயற்சி எடுக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (தி)

## மலர் வளையங்கள்

# பாராளுமன்றினுள் வந்தது எப்படி ? பொலிசார் மீது விசாரணை

(கொழும்பு)

பாராளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை அன்று உட்துறை அமைச்சிற்கு மலர்வளையம் வைத்து வணங்கிய விடயம் தொடர்பாக அன்றைய தினம் கடமையில் இருந்த பொலிசார் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

இம்மலர் வளையம் பொலிசாரின் சோதனைகளைக் கடந்து எவ்வாறு சபைக்குள் கொண்டு வரப்பட்டது என்ற விடயத்தை இலகுவில் கண்டுகொள்ளும் நோக்கி லேயே இவ்விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இம் மலர் வளையம் பாராளுமன்றத்திற்கு வெளியே வைத்து பகுதி பகுதியாக் கழற்றப்பட்ட பின்னர் ஒவ்வொன்றாக உள்ளே எடுத்துவரப்பட்டு பொருத்தப்பட்டு இருக்கலாம் என்று பாராளுமன்ற வட்டாரங்களில் இருந்து சந்தேகங்கள் எழும்பியுள்ளன. (உ-10)

## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை இளைஞர் உடலுளவிருத்திச் சங்க ஆண்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோயில் திருக்கல்யாண மண்டபத்தில் தலைவர் ப.தேவகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட இளைப்பாறிய மேலதிக அரசாங் அதிபர் து.வைத்தியலிங்கம் பிரதம விருந்தினராகவும், வட்டு தெற்கு கிராமசேவையாளர் சீ.நாகரததினம், வட்டு கிழக்கு கிராமசேவையாளர் க.சிறிகரன், வட்டு தென்மேற்கு கிராமசேவையாளர் செல்வி ந.சண்முகம், வட்டு மேற்கு கிராமசேவையாளர் செல்வி ம. தேவமனோகரி ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-5)

## கொழும்பில் இருவர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

கொழும்பு புற்றுநோய் மகரகம வைத்தியசாலைக்கு அருகில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் இரண்டுபேர் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கொலையுண்ட இருவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இச்சடலங்கள் இரண்டும் அடையாளம் காணும் பொருட்டு கொழும்பு தெற்கு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக மகரம பொலிஸ் நிலயப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இவ் இருவரையும் வானில் வந்த இனந்தெரியாத கோஷ்டியினர் சுட்டு விட்டுத் தப்பியோடிவிட்டனர். (தி)

## பயிற்சி நிறைவு

(கிளிநொச்சி)

மனிதநேய கண்ணிவெடி அகற்றும பிரிவில் பயிற்சி பெற்ற 39பேர் கொண்ட புதிய அணியினர் நேற்றுப் பயிற்சியை நிறைவு செய்துகொண்டு வெளியேறியுள்ளனர்.

இவ்வணியினருக்கான சான்றுதல் வழங்கும் வைபவம் நேற்றுப் பரந்தனில் நடைபெற்றது.

இவ்வணியினர் பூநகரிப்பகுதியில விரைவில் கண்ணிவெடி, பொறிவெடி மற்றும் மிதிவெடி அகற் றும் பணியில் ஈடுபடவுள்ளனர். (இ)

### அரசியல்..

தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தமை ஜனாதிபதியின் சிறிய நடவடிக்கையே. அடுத்த கட்ட நடவடிக்கையாக அமைச்சர் ஜோன் அமரதுங்காவின் பொலிஸ் திணைக்களம் ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்படவுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா குமாரங்கா வர்த்தமானி அறிவித்தல் மூலம் தனக்குத் தேவையான அமைச்சை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முடியும் என்றும் அநுரா பண்டாரநாயக்கா மேலும் தெரிவித்துள்ளார். (வ)

### ஐ.நா.உயர்...

டோக்கியோ மாநாட்டில் பங்குபற்றாமைக்குரிய காரணங்கள் குறித்தும் சிரான் அமைப்பின் செயற்பாடு மற்றும் சமாதானப் பேச்சுக்களை இடை நிறுத்தி இருப்பதற்கான சூழ்நிலை குறித்தும் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் இச்சந்திப்பில்மிகத் தெளிவாக விளக்கிக் கூறினார்.

இச் சந்திப்பில் ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய உதவி உயர் ஸ்தானிகர் கமால் மோயானி, அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி நீல்ரயிட் மற்றும் அமைப்பின் பிரதிநிதிகளும் புலிகள் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளருடன் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சுதாவும் கலந்து கொண்டார். (இ)

Physics
பிரத்தியேக வகுப்புக்கள்
A/L 2005
Mon.6.30-7.30a.m.
By.S.Sugendran
B.Sc.(sp).Dip in Ed
கொக்குவில் பிரம்படி லேன்

ளார். (உ-51,7,4)

### அமைச்சர்...

சென்றுள்ளனர்.

இதேவேளை மேலும் சில அமைச்சர்களும் மற்றும் பல அதிகாரிகளும் இன்றும் நாளையும் டோக்கியோ பயணமாக உள்ளனர் அமைச்சர் மிலிந்த மொறகொட இன்று டோக்கியோ பயண்மாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

முதலாம் திகதியும் மர்மமான முறையில் நகைக் கடையில் தொழில் புரியும் சபாரட்ணம் விஜியகுமார் என்ற இளைஞன் மரணம் அடைந்திருந்தார்.

நகைக் கடை பஜாரில் அடுத்தடுத்து இடம் பெற்ற மர்ம மரணத்தினால் அப்பகுதிக் கடை உரிமையாளர்கள், ஊழியர்கள் மத்தியில் பெரும் அச்சமும் பதற்றமும் நிலைவி வருகிறது. (இ-7,4,43)

CCS @ GLOBAL VILLAGE COMPUTER EDUCATION
இலவசக் கணனிக் கல்வித் திட்டம்
குலுக்கல் முறையினாலான தெரிவின் மூலம் 20 மாணவர்களுக்கு இலவசக் கணனிக் கல்வி வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
*முதலில் விண்ணப்பிக்கும் 500 மாணவர்களே இக்குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.*
கற்கை நெறியைத் தொடரும் மாணவர்களிற்கு இந்தியாவின் முதல் தர நிறுவனமான
GLOBAL VILLAGE COMPUTER EDUCATION
இனால் அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்
**குலுக்கலுக்கான பதிவுகள்** (REGISTRATION FOR LOTTRY)
ஏற்கப்படும்திகதி 03/06/2003 முதல் 14/06/2003 வரை
**குலுக்கல் நடைபெறும்**
**திகதி நேரம்:- 18 /06/2003,** 3.00 (P.M)
**நடைபெறும் இடம்:-** Global Village Computer Education
College Of Computer Studies
302/1 Navalar road Anaipanthy Jaffna
குலுக்கலுக்கு சமுகமளித்த ஏனையவர்களுக்கு 20%,50%
Director
[C/6251]

யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து)
ஏல விற்பனை
நீர்இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள், வில்தராசுகள் ஏல விற்பனை
இச்சமாசத்தில் இருக்கும் றொபின், என்பீல்ட் ரக நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கான பல்வேறு உதிரிப்பாகங்கள் மற்றும் வில் தராசுகள். ஆகியன நல்ல நிலையில் உள்ளன. இவை எதிர்வரும் 18.06.2003 புதன்கிழமை மு.பகல் 10.00 மணிக்கு சமாசப் பணிமனையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.
இவற்றை சமாச பணிமனை வேலை நாட்களில் பார்வையிடலாம் என்பதுடன், இதுதொடர்பான மேலதிக விபரங்களையும் அறிந்து கொள்ளலாம் என்பதனை அன்புடன் தெரியப்படுத்துகின்றோம்.
111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
(C/6263)
தலைவர்
யாழ், மா.வி.நு.கூ.ச.சமாசம்

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.